இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust

KDK SINCE 1909 JAPAN

அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 54 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(05.09.2023) ஹிஜ்ரி 1445, ஸபர் - 19, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

Special offer
1st to 30th September 2023

KDK SINCE 1909 JAPAN

DISCOUNT 15% (On selected models only) Cash or Card *Conditions apply

Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# சனல் குண்டு!

## உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புக்கு ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான அதிகாரிகள் உடந்தையாம்

மகேந்திரன் டினுஸ்காந்த்



இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டுவெடிப்புக்கு, ராஜபக்ஷ குடும்பத்துக்கு விசுவாசமான இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தின் சனல் - 4இல் இன்று (05) ஒளிபரப்பப்படவுள்ள நேர்காணல் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராஜபக்ஷர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்காக இராணுவ உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சலே மற்றும் இஸ்லாமிய அரசுடன் இணைந்த நபர்களுடன் ஒரு சதித்திட்டம் தீட்டுவதற்காக... 02 பக்கம்



யாழ்ப்பாணம் - மட்டுவில் ஐக்கிய மக்கள் கழகத்தின் ஏற்பாட்டில், இளைஞர்களை ஒன்றிணைக்கும் மாட்டுவண்டிச்சவாரி குறித்த கழகத்தின் இணைப்பாளர் ப.கஜிதரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(03) நடைபெற்றது. யாழ்ப்பாண மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிக்காக, 34 கழக மாட்டுவண்டி உறுப்பினர்கள் 155 காளைமாடுகளுடன் பங்குபற்றியிருந்தனர்.

படம்: பு.கஜிந்தன்

## குற்றச்சாட்டினால் மன உளைச்சல்



ஈஸ்டர் ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், பிரதிவாதியான அருட்தந்தை சிறில் காமினி இணையத்தில் வெளியிட்ட அறிக்கையினால் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே நேற்று(04) கொழும்பு மாவட்ட நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

இந்த விசாரணை கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன்விதான முன்னிலையில் நடைபெற்றது. அப்போது, பிரதிவாதி அருட்தந்தை சிறில் காமினியும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுடன் 2021ஆம் ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதி 'சூம்' மூலம் நடத்திய கலந்துரையாடலில் அருட்தந்தை சிறில் காமினியின் அறிக்கையால் ஏற்பட்ட அவமதிப்புக்கு 50 மில்லியன் ரூபா இழப்பீடுகோரி, சுரேஷ் சலே இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளார்.

அரசுத் தரப்பு சார்பில் சட்டத்தரணி பஹான் வீரசிங்க எழுப்பிய... 02 பக்கம்

## 62 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

### 38 பேர் இதுவரை உயிரிழப்பு

கே. சுபானி



நாட்டில் தற்போது மழையுடனான சீரற்ற காலநிலை தொடரும் நிலையில் நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 62 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் டெங்குவால் 38 பேர் உயிரிழந்துள்ளனர். 02 பக்கம்

## கேகாலை மாவட்டத்திலிருந்து புலம்பெயரும் வைத்தியர்கள்



கே. சுபானி

கேகாலை மாவட்டத்திலிருந்து விசேட வைத்திய நிபுணர்கள் 10 பேர் மற்றும் தொழில்சார் வைத்தியர்கள் 28 பேர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாகவும் மேலும் அதிக எண்ணிக்கையிலானோர் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு... 02 பக்கம்

## ஐ.தே.க சம்மேளனம் திடீர் ஒத்திவைப்பு

ஐக்கிய தேசியக் கட்சி சம்மேளனத்தை திகதி இன்றி ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டதாக கட்சியின் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் 56ஆவது கட்சி சம்மேளனத்தை எதிர்வரும் 10ஆம் திகதி நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் இடம்பெற்று முடிந்துள்ள நிலையில், நாட்டின் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாக கட்சி சம்மேளனத்தை திகதி குறிப்பிடாமல் பிற்போடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கட்சி முகாமைத்துவக் குழு கலந்துரையாடியே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. கட்சியின் முகாமைத்துவக் குழு ஓரிரு தினங்களில் கூடவிருக்கிறது. இதன்போது கட்சி சம்மேளனத்தை கூட்டுவதற்கான திகதி தீர்மானிக்கப்படும். 02 பக்கம்

## லாவ்ஸ், லிட்ரோ விலை அதிகரிப்பு





எரிவாயு விலை சூத்திரத்துக்கமைய, சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை நேற்று திங்கட்கிழமை (04) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரே எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவினாலும் 5 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 58 ரூபாவினாலும் 2.3 கிலோ கிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 26 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

புதிய விலை திருத்தத்துக்கமைய, 12.5 கிலோ கிராம் லாவ்ஸ் சிலிண்டரின் விலை... 02 பக்கம்

## மருத்துவ தவறால் இடது கையை இழந்த சிறுமி



பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட எட்டு வயது சிறுமி ஒருவருக்கு ஊசி மருந்து ஏற்றியதில் ஏற்பட்ட தவறு காரணமாக... 02 பக்கம்

## தொடர்மழையால் மூன்று மாவட்டங்களுக்கு பாதிப்பு



கே. சுபானி

நாட்டில் தொடரும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் மூன்று மாவட்டங்களில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கடும் மழையால் இரத்தினபுரி மாவட்டத்தின் எஹலியகொட பிரதேச செயலாளர் பிரிவுக்கு மண்சரிவுக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, இந்த மண்சரிவு எச்சரிக்கையில், மேற்குறித்த பகுதியில் கடந்த 24 மணிநேரத்துக்குள் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி... 02 பக்கம்

## கோடிக்கணக்கான சேமிப்பு பணம் மாயம்

மஹரகம பல்வேறு சேவைகள் கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான 11 கிராமிய வங்கிகளின் வைப்பாளர்களின் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வங்கிகளின் அதிகாரிகளால் மோசடி செய்யப்பட்டுள்ளதாக வாடிக்கையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

33ஆயிரம் வைப்பாளர்களின் 105 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை மோசடி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வைப்பாளர்களின் சுமார் 25 கோடி ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளதாகவும் மீதமுள்ள 80 கோடி ரூபா வங்கிகளில் இல்லை எனவும் கூறப்படுகிறது. 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



அப்போ இன்னும் ஒரு ஆறு மாசத்துக்குப் பேச பேராயருக்கு ஒரு சப்ஜெக்ட் கிடைச்சிருக்குது என்னங்கோ..

## சிறுவர் மீதான வன்முறைகள் குறித்து பாராளுமன்ற ஒன்றியம் அவதானம்



பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தலைமையில் அண்மையில் கூடிய பாராளுமன்ற சிறுவர் ஒன்றியத்தில் பாடசாலை பிள்ளைகளுக்கான இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பாலியல் கல்வி, இலங்கையில் சிறுவர்களுக்கு எதிரான சைபர் வன்முறைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பில் பாடசாலை மாணவர்களை முதற்கட்டமாகத் தெளிவூட்டும் வேலைத்திட்டத்தை நவீன ஊடகங்களின் ஊடாக ஒன்லைன் முறையில்... » 02 பக்கம்

## ரி 56 ரக துப்பாக்கியுடன் வீடு செல்ல முற்பட்ட இராணுவ சிப்பாய் கைது

மு.தமிழ்ச்செல்வன்



பளை இயக்கச்சி இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ரி 56 ரக துப்பாக்கி மற்றும் நான்கு மகசீன்களுடன் குருநாகல் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டுக்குச் செல்ல முற்பட்ட இராணுவ சிப்பாய் ஒருவர் மாங்குளம் புகையிரத நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று (04) இடம்பெற்றுள்ளது. இயக்கச்சி முகாம் ஒன்றில் பணியாற்றும் இராணுவ சிப்பாய் ஒருவர் விடுமுறையில்... 02 பக்கம்

### உஷ்



இந்திய பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருவதாக இருந்து அந்த விஜயம் பிற்போடப்பட்டதல்லவா?

இந்த விடயத்தால் இலங்கை அரச மேல்மட்டம் அதிர்ச்சியடைந்து இந்திய அமைச்சரை அழைக்க இராஜதந்திர மட்டத்தில் முயற்சிகளை எடுத்து வருகிறதாம். ஆனால் அந்த முயற்சிகள் இதுவரை வெற்றியளிக்கவில்லை.

இந்திய அமைச்சர் வருகை தரவிருந்த சமயம் சீனாவின் கப்பலுக்கு இலங்கை அனுமதி வழங்கியமை அவமதிப்பான செயலென இந்தியா கருதுகிறதாம்.

## குற்றச்சாட்டினால்...

கேள்விகளுக்குப் பதிலளித்த சுரேஷ் சலே, தான் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் இராணுவத்தில் 36 வருட சேவையை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவரின் இந்தக் கூற்றினால் தமக்கும் தனது பிள்ளைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டதாகத் தெரிவித்த சாட்சி, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது, இவ்வாறான கருத்துத் தவறான சமூகக் கருத்தை உருவாக்கும் எனவும் தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவரின் இந்த கூற்று காரணமாக தாம் மிகுந்த அழுத்தத்துக்கு உள்ளானதாக சாட்சி கூறினார்.

இதையடுத்து, அடுத்தகட்ட விசாரணை ஜனவரி 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## ஐ.தே.க சம்மேளனம்...

பெரும்பாலும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அல்லது அதற்கு அண்மித்த காலத்துக்குள் நடத்த நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

கட்சி சம்மேளனம் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப் பட்டுவருகின்றன.

என்றாலும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையால் தூரப்பிரதேசங்களில் இருந்துவரும் கட்சி ஆதரவாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடுவதுடன் சம்மேளனத்தை சிறப்பாக நடத்தி முடிக்க முடியாத நிலை ஏற்படும் என்ற விடயங்களை கருத்திற்கொண்டே பிற்போட தீர்மானித்தோம்.

என்றாலும் கட்சி சம்மேளனத்தில் கலந்து கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்த ஆதரவளர்கள், இதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்காக எமது கவலையை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

## சிறுவர் மீதான வன்முறைகள்...

முதற்கட்டமாக முன்னெடுக்க எதிர்பார்த்திருப்பதாக ஒன்றியத்தில் ஆஜராகியிருந்த அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் திட்டத்தை ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்க ஒன்றியம் விரும்புவதாக அதன் தலைவர் சுட்டிக்காட்டினார்.

சமூகத்தில் உள்ள பல்வேறு பிரிவுகள் மற்றும் குழுக்களுக்கு சிறந்த புரிதலை ஏற்படுத்தும் நோக்கத்தில் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் பாலியல் கல்வி தொடர்பான உள்ளடக்கத்தை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஒன்றியத்தில் கலந்துரையாடப்பட்டது.

சிறுவர்கள் மத்தியில் போதைப் பாவனை அதிகரித்துள்ளமை மற்றும் சிறுவர்களின் உரிமைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப் பட்டது.

பாடசாலை மாணவர்கள் தமது அக்கறைகளை வெளிப்படுத்தக் கூடிய புகார் பெட்டிகளை மீண்டும் அறிமுகப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தியிருப்பதாக ஒன்றியம் தெரிவித்தது. 1929 விசேட தொலைபேசி இலக்க சேவை குறித்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இலங்கை சிறுவர்களுக்கு எதிரான சைபர் வன்முறைகளின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அவற்றுக்கு எதிரான சட்ட ஏற்பாடுகள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. சைபர் பாதுகாப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு அதிகாரிகள் தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஒன்லைன் ஊடாக சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்கள் குறித்தும் ஒன்றியம் கவனம் செலுத்தியதுடன் இவற்றைத் தடுப்பதற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியது. பாலியல் தொடர்பான இணையப்பக்கங்கள் மற்றும் முகப்புத்தகப் பக்கங்கள் உள்ளிட்ட சமூக ஊடகத் தளங்களில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கொண்ட பின்னூட்டங்கள் வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், சிறுவர்கள் தொடர்பான வழக்குகள் குறித்து வெளியிடப்படும் ஊடக அறிக்கைகள் நெறிமுறையற்ற வகையிலும் உணர்வற்ற வகையிலும் பதிவாகி வருவதால் முறையான ஊடகக் கொள்கையின் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

பாராளுமன்ற சிறுவர் ஒன்றியத்தின் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, ஒன்றியத்தின் இணைத் தலைவர் வேலு குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான (கலாநிதி) வீ.இராதாகிருஷ்ணன், இரான் விக்ரமரத்ன, தலதா அதுகோரள ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரி 56 ரக துப்பாக்கியுடன்...

வீடு செல்லவதற்காக புறப்பட்டுள்ளார். அவர் புறப்படும் போது தனது ரி 56 ரக துப்பாக்கியையும் தன்னுடன் எடுத்துச் சென்றுள்ளார். விடுமுறையில் செல்லும் இராணுவ சிப்பாய் துப்பாக்கியை ஒப்படைக்காது சென்றமையால் முகாமில் பரபரப்பு ஏற்பட குறித்த முகாம் இராணுவனத்தினர் சிப்பாயை தேடி பளை புகையிரத நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

ஆனால் குறித்த சிப்பாய் பளை புகையிரத நிலையத்துக்குச் செல்லாது கொடிகாமம் சென்று அங்கிருந்து குருநாகல் செல்வதற்காக புகையிரதத்தில் ஏறி பயணித்துள்ளார்.

இந்த நிலையில் இராணுவ அணி ஒன்று சிவில் உடையில் பளை புகையிரத நிலையத்தில் ஏறி குறித்த சிப்பாயை தேடிய போது அவர் புகையிரதத்துக்குள் கண்டுபிடிக்கப்பட்டார். இதன் போது புகையிரதம் கிளிநொச்சி அறிவியல் நகர் புகையிரத நிலையத்தை அடைந்திருந்தது. எனவே உடனடியாக இராணுவத்துக்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ பொலிஸார் மாங்குளம் புகையிரத நிலையத்தில் வைத்து சிப்பாயை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சிப்பாய் இராணுவ பொலிஸாரிடம் வழங்கிய தகவல்களின் படி குடும்பத் தகராறு காரணமாக துப்பாக்கியை எடுத்துச் சென்றதாக தெரிவித்துள்ளார்.

துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட சிப்பாய் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கோடிக்கணக்கான சேமிப்பு...

கடனாக செலுத்திய 25 கோடி ரூபாவில் 17 கோடி ரூபா கடன் காலம் முடிவடைந்துள்ளது. பல்வேறு சேவைகள் கூட்டுறவு சங்கத்தின் தலைமையக கட்டடத்தையும் அடகு வைத்து அதன் அதிகாரிகள் மூன்று கோடி 35 இலட்சத்தை கடனாக பெற்றுள்ளதாகவும் மாதிவெல காணியொன்றும் அடகு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வங்கி அதிகாரிகள் 7 கோடி ரூபா நிரந்தர வைப்புத் தொகையை பிணை வைத்து 7 கோடியே 98 இலட்சம் ரூபா கடன் பெற்றுள்ளதாகவும் அந்த பணத்துக்கு என்ன நடந்தது எனவும் வாடிக்கையாளர்கள் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## 62 ஆயிரத்து 29 டெங்கு...

டெங்கு நோயால் பாதிக்கப்படுவோரில் 20 சதவீதமானோர் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சின் தேசிய டெங்குநோய் கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் மேல் மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்தவகையில் மேல் மாகாணத்தில் 30 ஆயிரத்து 271 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் தற்போது பல பகுதிகளில் மழையுடனான சீரற்ற காலநிலை நிலவி வருவதால் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் பொதுமக்கள் நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என எச்சரிக்கப்படுகிறது.

வீடுகள், அலுவலகங்கள் மற்றும் கட்டடங்கள் உள்ளிட்ட இடங்களைச் சுற்றிலும் சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ள தேசிய டெங்கு நோய் கட்டுப்பாட்டுப்பிரிவின் பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரத்ன, மத ஸ்தலங்கள் மற்றும் பாடசாலைக வளாகங்களில் நுளம்பு பெருகும் இடங்கள் இனங்கண்டு அவற்றை சுத்தப்படுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

### 63.3 சதவீதமானோர் பல்கலைக்கு தகுதி

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை (2022) பெறுபேறுகள் நேற்று (04) பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டன.

அதற்கமைய, பரீட்சைகள் திணைக்களத்தின் www.donets.lk என்ற இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

பரீட்சைக்கு 2 இலட்சத்து 32 ஆயிரத்து 797 பாடசாலை ரீதியான பரீட்சார்த்திகளும் 31 ஆயிரத்து 136 தனியார் பரீட்சார்த்திகளுமாக மொத்தமாக 2 இலட்சத்து 63 ஆயிரத்து 933 பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர்.

இவர்களுள் 63.3 சதவீதமானவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். அதற்கமைய, இம்முறை பரீட்சைக்குத் தோற்றியவர்களுள் மொத்தமாக 166,938 பேர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றுள்ளனர்.

இதேவேளை, பரீட்சார்த்திகள் மீண்டும் 2023- உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற வேண்டுமெனில் எதிர்வரும் 11 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் விடைத்தாள் மீள் பரிசீலனைக்கும் 07 – 16 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமென கல்வி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (04.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.4479 | 212.5816 |
| கனேடியன் டொலர் | 229.5591 | 241.2646 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.4648 | 45.4229 |
| யூரோ | 337.0490 | 353.2573 |
| ஜப்பான் யென் | 2.1410 | 2.2408 |
| சிங்கப்பூர் டொலர் | 230.8166 | 242.2956 |
| ஸ்ரேலிங் பவுன் | 394.7815 | 412.0816 |
| சுவிஸ் பிரான்ங் | 352.1076 | 371.3860 |
| ஐ.அ. டொலர் | 313.9388 | 326.2837 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846.8580 |
| குவைட் | குவைட் தினார் | 1,035.7080 |
| ஓமான் | ஓமான் றியால் | 829.2713 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.5708 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.1204 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86.9176 |

## சனல் 4 குண்டு!...

2018 இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றதாகவும் அந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு இடம்பெற்று முடிந்த கையோடு சுரேஷ் சலே என்னிடம் வந்து ராஜபக்ஷக்களுக்குத் தேவை இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல். அப்போது தான் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி" எனக் கூறியதாக அன்ஸிர் ஆசாத் மௌலானா சனல் 4 விடம் தெரிவித்துள்ளார்.

"தாக்குதல் திட்டம் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல. இது இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதியளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சலே இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார் என்றும் மௌலானா தெரிவித்துள்ளார்.

கடந்த 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பற்றிய அதிர்ச்சியூட்டும் தகவல்களை இன்று வெளியிடப்போவதாக செனல்-4 அறிவித்துள்ள நிலையில், தற்போது புகலிடம் கோரி சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் வசிக்கும் கிழக்கு மாகாண இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் முன்னாள் பேச்சாளர் ஆசாத் மௌலானாவே இதில் முக்கிய பாத்திரம் வகிப்பது பகிரங்கமாகியுள்ளது.

"இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள் - அனுப்புதல்கள்" என்ற தலைப்பில் இன்று (05) ஒளிபரப்பப்படவுள்ள இந்த நிகழ்ச்சியில், அரசாங்கத்துக்குள் உள்ள அதிகாரிகளே, தாக்குதல்களுக்கு உடந்தையாக இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த காணொளியை ஓகஸ்ட் 15 ஆம் திகதி ஒளிபரப்ப செனல்-4 திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால் சனல்-4 க்கு இலங்கையின் அரச புலனாய்வு சேவையின் (SIS) தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே தனது சட்டத்தரணிகள் மூலம் வழங்கிய தெளிவுபடுத்தலைத் தொடர்ந்து, அன்றைய தினம் காணொளி ஒளிபரப்பை நிறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சம்பவங்கள் தொடர்பில், ஆசாத் மௌலானா, தனது பெயரைப் பயன்படுத்தியுள்ள காலத்தில், தாம் இலங்கையில் கடமையாற்றவில்லை என்பதை,மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி, உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் செனல்-4 க்கு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலியின் பதிலைத் தொடர்ந்து, சனல்-4 காணொளியின் தலைப்பை மாற்றி இன்றைய தினம் அதனை ஒளிபரப்பத் திட்டமிட்டுள்ளது.

## மருத்துவ தவறால்...

இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், காய்ச்சல் காரணமாக குறித்த சிறுமி அனுமதிக்கப்பட்ட நிலையில் நோய் எதிர்ப்புக்காக ஊசி மூலம் மருந்து ஏற்றப்பட்டது.

ஊசி ஏற்றப்பட்ட மறுநாள் இரவு சிறுமி வலியினால் அவதிப்பட்ட நிலையில் குறித்த விடுதியில் கடமையில் இருந்த தாதியர்களிடம் சிறுமியின் நோய்நிலை தொடர்பில் தாயார் கூறிய போது ஊசி ஏற்றப்பட்டால் நோவு இருக்கும் என விடுதியின் தாதியர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதில் அளித்ததாக பெற்றோர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சிறுமியின் கை நரம்பு பாதிக்கப்பட்டமையை உணர்ந்த வைத்தியர்கள் அதனை அகற்ற வேண்டும் எனத் தெரிவித்த நிலையில் கடந்த சனிக்கிழமை காலை சத்திர சிகிச்சை மூலம் குறித்த சிறுமியின் மணிக்கட்டுக் குட்பட்ட பகுதி அகற்றப்பட்டது.

சிறுமி அனுமதிக்கப்பட்ட விடுதியின் பொறுப்பு வைத்தியர் குறித்த தினத்தில் கடமையில் இருந்தாரா என்பது தொடர்பில் சந்தேகங்கள் எழும் நிலையில் விடுதியில் இருந்த தாதியர்களின் அலட்சியப் போக்கும் சிறுமியின் கை அகற்றப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளது என்ற குற்றச்சாட்டு வலுவாக முன்வைக்கப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலைப் பணிப்பாளர் தங்க முத்து சத்தியமூர்த்தியை தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் கூறியதாவது ,

இடம்பெற்ற சம்பவம் மனவேதனையை உண்டு பண்ணும் ஒரு சம்பவமாக பார்க்கிறேன்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணைக் குழுவை நியமித்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சுக்கும் குறித்த விடயம் தொடர்பாக அறிவித்துள்ளேன்.

விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பாரபட்சமின்றி எடுப்பேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கேகாலை மாவட்டத்திலிருந்து...

எதிர்பார்த்துள்ளனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கேகாலை மாவட்ட (இணைப்பாளர்) டொக்டர் தர்ஷன விஜேதுங்க தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கேகாலை மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கேகாலை பொது வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் விசேட மனநல வைத்திய நிபுணர், அவசர சிகிச்சைப் பிரிவு, நரம்பியல் பிரிவு மற்றும் குருதி தொடர்பான விசேட வைத்திய நிபுணர், மயக்க மருந்து தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

அத்துடன் கேகாலை மாவட்டத்தின் விசேட சமூகநல வைத்தியர், கரவனல்லை ஆதார வைத்தியசாலையின் மயக்கமருந்து தொடர்பான விசேட வைத்திய நிபுணர், கதிரியக்கவியல் மற்றும் மனநல விசேட வைத்திய நிபுணர் ஆகியோர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

அதேபோன்று மாவனெல்லை வைத்தியசாலையின் மகப்பேற்று விசேட வைத்திய நிபுணரும் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

வைத்திய சேவைக்கான உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாமையே இவ்வாறு விசேட வைத்திய நிபுணர்களும் வைத்தியர்களும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான பிரதான காரணமாகும்.

அதேபோன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வரி அறவீட்டால் வைத்தியர்கள் பெரும் அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் நாட்டைவிட்டு வெளியேறும் வைத்தியர்கள் பிரித்தானியா, அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று சேவையாற்றி வருகின்றனர்.

மேற்கண்ட நாடுகளில் எமது நாட்டு வைத்தியர்களுக்கு மிகுந்த வரவேற்பு காணப்படுவதுடன், விசேட கொடுப்பனவுகளும் கிடைக்கின்றன.

இதற்கு முன்னர் அந்நாடுகளில் வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கு ஈடான தொகை நமது நாட்டிலும் வழங்கவேண்டும் எனத் தெரிவித்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லை. அவ்வாறு வழங்கப்படுமாயின் நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்களின் எண்ணிக்கையை குறைக்க அல்லது நிறுத்த முடிந்திருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.09.03
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5226
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,844,032.00
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 4 3 1 8 7 8

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3468
சீட்டிழுப்பு திகதி 2023.09.03
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,098,476.80
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 20 36 39 44
விசேட எழுத்து S
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 32507

Lucky 7
திகதி 03.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0052
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 7 5 2 8 8 6
L7 இலக்கம் 0 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,536,912.00

தன நிதானய
தேதி 2023/09/03
சீட்டிழுப்பு இலக்கம் 1256
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,810,332.80
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 12 14 41 67
விஷேசட ஆங்கில எழுத்து L
Double Chance இலக்கம் 18534

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 535
சீட்டிழுப்பு திகதி 2023-09-03
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,084,374.80
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 02 07 28 30
விசேட இலக்கினம் கும்பம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1574
03/09/2023
63584
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 406,418,064.00
ஆங்கில எழுத்து E
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 08 15 25 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## தொடர்மழையால் மூன்று...

பதிவாகியுள்ள நிலையில் மேலும் மழை நீடித்தால் மண்சரிவு, நிலம் தாழிறக்கம், மண்மேடுகள், பாறைகள் சரிந்து விழுதல் போன்ற ஆபத்துகள் ஏற்படக்கூடும். எனவே குறித்த பகுதியிலிருந்து மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இடர் முகாமைத்து மத்தியநிலையம் நேற்று (04) வெளியிட்டுள்ள அறிக்கையில்,நாட்டில் பெய்துவரும் கடும் மழையுடனான சீரற்ற காலநிலையால் காலி, களுத்துறை மற்றும் இரத்தினபுரி உள்ளிட்ட மூன்று மாவட்டங்களில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் களுத்துறையில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேரும் காலியில் 7குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும் இரத்தினபுரியில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 24 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்குறித்த மூன்று மாவட்டங்களிலும் வீசிய பலத்த காற்று காரணமாக மரம் முறிந்து வீழ்ந்த அனர்த்தங்களினால் 26 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் களுத்துறை, பண்டாரகம பகுதியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

மழையுடனான காலநிலை நீடிக்கும் நிலையில் காலி, களுத்துறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு ஏலவே விடுக்கப்பட்டிருந்த மஞ்சள் மற்றும் செம்மஞ்சள் நிலையிலான மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு எச்சரிக்கை காலப்பகுதியில் நிலத்தில் வெடிப்பு, நிலம் தாழிறக்கம் மற்றும் மரங்கள், மின் கம்பங்கள் முறிந்து விழுதல், சரிவான பகுதிகளில் அமைந்துள்ள கட்டடங்களின் தரை மற்றும் சுவர்களில் வெடிப்புகள் உருவாகுதல், நிலத்திலிருந்து திடீரென நீரூற்றுகள், சேற்று நீர் தோன்றுதல் என்பன குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

திருகோணமலை தொடக்கம் காங்கேசன்துறை, புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிரதேசத்தில் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் இப்பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் கடலுக்குச் செல்வதையும் தவிர்த்துக்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

### ஒருவர் பலி

இதேவேளை நாவலப்பிட்டி, மஹவத்துர பிரதேசத்தில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதிய கட்டடமொன்றுக்கான அத்திபாரம் இடும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மண்மேடு சரிந்து வீழ்ந்த நிலையில் நாவலப்பிட்டிய, வெரலுகஸ்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## லாவ்ஸ், லிட்ரோ

3127 ரூபாவாகவும் 5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 1256 ரூபாவாகவும் 2.3 கிலோகிராம் சிலிண்டரின் விலை 587 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டதாவது,

கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் உலக சந்தையில் எரிவாயுவின் விலை 100 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது.

உலக சந்தையின் விலைக்கு அமைய எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டுமாயின் தேசிய மட்டத்தில் எரிவாயுவின் விலையை குறைந்தபட்சம் 980 ரூபாவால் அதிகரிக்க வேண்டும். கடந்த மாதம் எரிவாயுவின் விலையில் திருத்தம் மேற்கொள்ளவில்லை.

இந்த மாதம் உலக சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிக்க கூடும் என்பதை உணர்ந்து வழமைக்கு மாறாக மேலதிகமாக எரிவாயு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே விலை அதிகரிப்பை நிறுவன மட்டத்தில் முகாமைத்துவம் செய்துகொண்டு 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை145 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு புத்தாண்டு காலப்பகுதி வரை எரிவாயு விநியோகத்தில் எவ்வித தட்டுப்பாடும் ஏற்படாது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் கடந்த ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் மாத்திரம் சமையல் எரிவாயுவின் விலை 2000 ரூபா வரை கட்டம் கட்டமாக குறைக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லாஃப்ஸ் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி 12.5 கிலோ சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 3,835 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 05 கிலோ சிலிண்டரின் விலை 59 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 1,535 ரூபாவாக மாற்றப்பட்டுள்ளது.

# கெஹேலியவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின் த.தே.கூவின் இறுதி முடிவு இன்று

பு.கஜிந்தன்

சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதா அல்லது எதிராக வாக்களிப்பதா அல்லது வாக்களிப்பிலிருந்து விலகியிருப்பதா என்ற நிலைப்பாட்டை செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கூட்டத்தொடர் கூடும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சேர்ந்து முடிவெடுக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

மலையாளபுரம் கிராம மக்களுடனான கலந்துரை யாடல் ஒன்று மலையாளபுரம் கிராம அபிவிருத்தி சங்க வளாகத்தில் நேற்று (04) நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

இன்று வைத்தியசாலைகளில் சாதாரண நீரிழிவு நோயாளருக்கு கூட மருந்து இல்லாத நிலை நிலவும் அதேவேளை, வைத்தியசாலைகளில் பாரிய மருந்து நெருக்கடி நிலவுகிறது. மருந்துகளை நோயாளர்கள் வெளியில் வாங்க வேண்டிய நிலையுள்ளது.

பல வைத்தியசாலைகள் இயங்கு நிலையற்று காணப்படுகின்றன. இலங்கையின் சுகாதாரத்துறை பாரிய வீழ்ச்சியை சந்தித்திருக்கிறது. பொறுப்பு வாய்ந்த கட்சி என்ற ரீதியில் கலந்தாலோசித்து வெள்ளிக்கிழமைக்கிடையில் முடிவை அறிவிப்போம் என்றார்.



அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்க கொழும்பு மாவட்ட கிளையால் நடத்தப்பட்ட இலவச மருத்துவமுகாம் அண்மையில் அவிசாவளை, வகரத்தனசார மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது, மூக்குக் கண்ணாடி வழங்குதல், மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதில் சங்கத்தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வெளிநாடுகளில் சொத்துகளை வைப்பிலிட்டுள்ளவர்கள் இடமிருந்து மீள நிதி அறவிட அரசாங்கம் தீர்மானம்

## 15ஆம் திகதியிலிருந்து புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் அமுலாகுமென நீதியமைச்சர் அறிவிப்பு



மோசடியான முறையில் உழைக்கப்பட்ட சொத்துகளை வெளிநாடுகளில் வைப்பிலிட்டுள்ள நபர்களின் நிதியை மீண்டும் அறவிடுவதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை காரியாலயம் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், எதிர்வரும் சில தினங்களில் அந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவ்வாறான முறையில் பணம் உழைத்து வெளிநாட்டு கணக்குகளில் வைப்பிலிட்டுள்ள நபர்களின் பணத்தை மீள அறவிடுவது தொடர்பில் உலக வங்கியின் சார்பில் போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபை காரியாலயம் செயற்பட்டு வருவதாகவும் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் இம்மாதம் 15ஆம் திகதியிலிருந்து அமுலாக்கப்பட்டவுடன் அவ்வாறான நபர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பு புதிய இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு கிடைக்குமென்றும் நீதியமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு, ஊழல் செய்யப்பட்ட சொத்துகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான உலக வங்கி மற்றும் போதைப்பொருள், குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை காரியாலயத்துடன் இணைந்து செயற்படுத்தப்படும் STAR முறைக் கமைய, மோசடியான முறையில் சொத்துகளை வெளிநாடுகளில் வைப்பிலிட்ட நபர்களின் நிதியை மீண்டும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலை நடவடிக்கைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ மற்றும் போதைப்பொருள், குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் தெற்காசிய வலயத்துக்கான பிரதிநிதி மார்கோ டெக்சீராவுக்கும் (Marco Teixeira) இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று (04) அமைச்சில் இடம்பெற்றது.

போதைப்பொருள், ஊழல் மற்றும் பயங்கரவாதமற்ற வகையில் உலகை பாதுகாப்பது, உலக சமாதானத்தை பாதுகாத்தல், அபிவிருத்தி நடவடிக்கைக்கான ஒத்துழைப்பை வழங்கும் நோக்கில் 1997ஆம் ஆண்டு போதைப்பொருள், குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கையில் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான நீதித்துறை அமைப்பு, ஊழலைக் குறைப்பதற்காக நிறைவேற்றப்பட்ட புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், போதைக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்கான புனர்வாழ்வுச் செயன்முறைகள் தொடர்பில் நீதியமைச்சர் கருத்து வெளியிட்டார்.

புனர்வாழ்வு செயற்பாடுகளை வலுப்படுத்த புதிய சட்டங்களை ஏற்றுக் கொண்டமை, போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க புதிய நிலையங்களை நிறுவுதல், சிறைச்சாலைகளில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் சமூக சீர்திருத்த முறைகள் பற்றிய உண்மை நிலைமைகள் தொடர்பில் அமைச்சர் விளக்கமளித்தார்.

இலங்கையில் குற்றங்கள் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு ஏற்கனவே பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மேலும் எதிர்காலத்தில் அந்த திட்டங்களை வலுவாக அமுல்படுத்துவதற்கும் ஆதரவும் வழங்குவதற்கும் தயாராக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தின் தெற்காசிய அலுவலகம் தெரிவித்துள்ளது.

# மனைவி, மகள்களை தாக்கிய குற்றச்சாட்டில் கான்ஸ்டபிள் கைது

தனது மனைவி மற்றும் மகள்களால் தாக்கப்பட்டு, கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் சிலாபம் பொது வைத்தியசாலையில், சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ராஜகந்தலுவ, மனவேரிய பகுதியைச் சேர்ந்தவர் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மதுபோதையில் வீட்டுக்கு சென்று தமது மனைவி மற்றும் இரண்டு மகள்கள் மீது குறித்த கான்ஸ்டபிள் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, மனைவி மற்றும் அவரது மகள்களும் பதிலுக்கு அவர் மீது தாக்குதல் நடத்தி கை, கால்களை கட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மனைவி மற்றும் மகள்கள் மீது தாக்குதலை நடத்திய குற்றத்துக்காக, குறித்த கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சம்பவத்தில் காயமடைந்த மனைவியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு- இராஜதந்திரிகளுக்கு விளக்கம்

இராஜதந்திர குழுவுடனான கலந்துரையாடலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பான அபிவிருத்திகள் குறித்தும் கொழும்பை தளமாகக்கொண்ட இராஜதந்திரப் படைக்கு விளக்கமளிக்கும் நிகழ்வும் அண்மையில் வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, நீதி இராஜாங்க அமைச்சர் ஜயா அனுராதா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஏ.விஜேவர்தன மற்றும் செயலாளர் நீதியரசர் வசந்த பெரேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளேவால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் முக்கிய அம்சங்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# எனக்கான பொறுப்புகள் அதிகரித்து விட்டன

## கனடாவில் மனோ கணேசன் எம்.பி. தெரிவிப்பு

பு.கஜிந்தன்

இலங்கையிலும் எனக்கான பொறுப்புகளும் பணிகளும் அதிகரித்து விட்டன என தமிழ் முற் போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கனேடிய தமிழர் பேரவை நடத்திய 'தமிழர் திருவிழா 2023' கடந்த வாரம் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் வெற்றிகரமாக நடைபெற்றது.

அந்த நிகழ்வின்போது கனடாவில் உள்ள பொது அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்களை சந்தித்தவேளை இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கனடாவுக்கு நான் இந்தத் தடவை கனேடிய தமிழர் பேரவையினால் நடத்தப்பட்ட 'தெருவிழா' விற்காகவே அழைக்கப்பட்டேன். ஆனால், இங்கு தங்கியிருந்த ஒரு வார காலத்தில் கனடாவில் உள்ள பல தரப்பினரிடமிருந்தும் அமைப்புகளிடமிருந்தும் நான் செவிமடுத்த கருத்துகளை தாயகத்துக்கு காவிச் செல்கின்றேன் என்றார்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 05ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# மருத்துவமனைகளின் அசட்டைக்கு எல்லை இல்லையா?

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட 8 வயதுச் சிறுமியின் இடது கை மணிக்கட்டுடன் துண்டிக்கப்பட்ட சம்பவம் மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

காய்ச்சல் காரணமாக குறித்த சிறுமி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், ஊசி மூலம் மருந்து ஏற்றப்பட்டுள்ளது. ஊசி செலுத்தப்பட்ட மறுநாள் இரவு சிறுமி வலியினால் அவதிப்பட்டுள்ளார்.

அவ்வேளை விடுதியில் கடமையில் இருந்த தாதியர்களிடம் சிறுமியின் தாயார் கூறியபோது, ‘‘ஊசி ஏற்றப்பட்டால் இப்படித்தான் வலி இருக்கும்’’- என தாதியர்கள் பொறுப்பற்ற விதத்தில் பதிலளித்ததாகப் பெற்றோர் தரப்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சிறுமியின் கை நரம்பு பாதிக்கப்பட்டதை உணர்ந்த வைத்தியர்கள் அதனை அகற்றவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். அதன் அடிப்படையில் கடந்த சனிக்கிழமை (02) காலை சத்திர சிகிச்சை மூலம் சிறுமியின் மணிக்கட்டுடனான கையின் பகுதி அகற்றப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவிக்கையில், சிறுமிக்கு நடந்த சம்பவம் மனவேதனையை ஏற்படுத்துகிறது. இது தொடர்பில் விசாரணை செய்ய மூவர் அடங்கிய விசாரணைக் குழுவை நியமித்த நிலையில், மத்திய சுகாதார அமைச்சுக்கும் இவ்விடயம் தொடர்பாக அறிவித்துள்ளேன்.விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பாரபட்சமின்றி எடுப்பேன் என உறுதியளித்துள்ளார்.

மருத்துவமனைகளில் இடம்பெறும் திடீர் உயிரிழப்புகள் குறித்து கடந்த சில மாத காலங்களாகப் பேசப்பட்டுவரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் சிறுமிக்கு நடந்த இந்த அனர்த்தம் அதிர்ச்சியைத் தருகிறது.

இலங்கையின் அரச வைத்தியசாலைகளில் அண்மைக்காலமாக இடம்பெற்ற ஆறு மரணங்களில் ஐந்து மரணங்கள் அனாபிலாக்ஸி என்ற உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் ஒவ்வாமையினால் இடம்பெற்றுள்ளது என நிபுணர்கள் குழு தெரிவித்திருந்தமையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

மருந்துகள் ஒவ்வாமையினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து ஆராய்வதற்கான நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் நிபுணர்கள் குழு இது தொடர்பில் பல பரிந்துரைகளையும் முன்வைத்தது.

களுத்துறை பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய குடும்ப சுகாதார சேவை பெண் உத்தியோகஸ்த்தர் ஒருவர் வைத்தியசாலையில் சத்திர சிகிச்சையில் ஏற்பட்ட தவறு காரணமாக அண்மையில் உயிரிழந்தார்.

அதேபோல், மருத்துவ ஊழியர்களின் தவறினாலும் - கவனக் குறைவினாலும் பிரசவ நேரத்தில் பிரசவ அறையின் தரையில் விழுந்த சிசு, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது.

சிறுவர் வைத்தியசாலையில் இரண்டு சிறார்கள் அண்மையில் உயிரிழந்த சம்பவங்கள் என்று அண்மைக்காலமாகவே வைத்தியசாலைகளில் துயரச் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இப்படியான சம்பவங்கள் நடந்த பின்னர் விசாரணை, நட்டஈடு என்று தீர்வுகள் வந்தாலும் அவை தீர்வு அல்ல.ஒருவருக்கு வருத்தம் வந்தால் அவரைக் காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டே மருத்துவமனைக்கு உறவினர்கள் அழைத்து வருகின்றனர்.ஆனால், எந்தவித அக்கறையோ,கவனமோ இல்லாமல் நடந்துகொள்ளும் பெரும்பாலான அரச வைத்தியசாலைகள் , உயிர்களைத் துச்சமாகவே கருதுகின்றன. ஏதாவது ஒரு பாதிப்பு நோயாளிக்கு நடந்துவிட்டால் எந்தவித குற்ற உணர்வுகளோ, சலனங்களோ இன்றி விசாரணைக்குழு அமைப்பதில் மட்டும் மருத்துவமனை நிர்வாகிகள் கவனம் செலுத்துகின்றனர்.

மருந்துகளைத் தவறாக வழங்கிவிடுதல் அல்லது நோயாளி மீதான கவனக்குறைவு , சத்திரசிகிச்சையின்போது விடும் தவறு என்பவை தொடர்பில் தீவிர கவனம் செலுத்தப்படவேண்டும். வெறுமனே விசாரணைக்குழு அமைப்பதால் மட்டும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் கிடைக்கப்போவதில்லை. கவனயீனமாகத் தவறுகள் விடப்பட்டிருப்பதாகக் கூறி அதில் சம்பந்தப்பட்டவர்களை இடமாற்றம் செய்தாலும் பிரச்சினைக்கு அது தீர்வல்ல. இந்த அசட்டைகளுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டால் மாத்திரமே இப்படியான அனர்த்தங்கள் தொடராது. அரசாங்கம் இதில் தீவிர கரிசனையைச் செலுத்தவேண்டும்.



# முகவாதம் - பிரச்சினைக்குத் தீர்வு



3 மாத கர்ப்பிணி ஒருவர் ஆஸ்பத்திரிக்கு அவரது கணவருடன் பதற்றத்துடன் வந்தார். இதுதான் அவர்களுக்கு முதல் குழந்தை. ஏன் இந்தப் பதற்றம் என்று கேட்டால் அந்தப் பெண்ணுக்கு 3 நாட்களாக வாய் கோணலாகி இருக்கிறது. இரவு நன்றாகப் பேசிவிட்டுத் தான் தூங்கச் சென்றிருக்கிறார். காலையில் எழுந்து பார்த்தால் வாய் கோணிக் கொண்டு இருந்துள்ளது. 2 நாட்களில் சரியாகி விடும் என்று நினைத்துள்ளார். ஆனால், வாய் கோணல் சரியாவதற்குப் பதிலாக வலி அதிகரித்துக்கொண்டே சென்றுள்ளது. உடனே கணவரை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்துள்ளார்.

வாய் கோணலாக இருப்பதால் பல் தேய்க்க முடிவதில்லை. பல் தேய்த்தால் வாய் ஒருபக்கம் செல்கிறது. தண்ணீரைக்கொண்டு கொப்பளிக்க முடியவில்லை. சாப்பிட முடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீராகக் கொட்டுகிறது என்று சொல்லி அந்தப் பெண் பதறுகிறார்.

இதேபோன்ற பாதிப்புடன் பதற்றமாக வருபவர்களை மருத்துவர்களாகிய நாங்கள் அடிக்கடி பார்த்திருக்கிறோம். இந்தப் பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புத்தான் முகவாதம் என அழைக்கப்படுகிறது. பக்கவாதம் (ஸ்ட்ரோக்) உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது. ஆனால், முகவாதம் என்பது அந்தளவுக்கு ஆபத்தானது அல்ல. ஆனால், பாதிக்கப்பட்ட நோயாளிகளோ தங்களுக்கு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் பக்கவாதம் வந்து விட்டது என அச்சமடைந்து பதற்றமாகி விடுகிறார்கள்.

முகவாதம் என்பது முகத்தின் ஒரு பகுதி வாதம் ஆகி விடுவது, அதாவது, முகத்தின் ஒரு பகுதி செயற்படாமல் போய்விடுவது. இதைத்தான் முக வாதம் என்று சொல்கிறோம். பொதுவாக நரம்பில் 2 வகைகள் உள்ளன. ஒன்று, செயற்படும் நரம்பு, மற்றொன்று உணர்வு நரம்பு. இதில் முகத்துக்கு வரும் நரம்பு, பலவீனமாகி வரக்கூடியதுதான் முகவாதம். இந்த வாதத்தால் பாதிக்கப்பட்டவர் கண்ணை மூட முடியாது. கண்ணை மூட முயற்சித்து முடியாமல் தவித்தபடி இருப்பார். மேலும் கண்ணிலிருந்து தண்ணீர் வரும்.

ஸ்ட்ரோக் எனப்படும் பக்கவாதத்தால் வரும் பாதிப்பின்போது கண்ணை வழக்கம்போல் இறுக்கி மூட முடியும். நெற்றியையும் சுருக்க முடியும். இடதுபக்க சுருக்கமும், வலது பக்க சுருக்கமும் ஒரே மாதிரி இருக்கும். ஆனால், முகவாதத்தில் கண்ணை முழுவதுமாக மூட முடியாது. நெற்றிச் சுருக்கமும் சரியாக வராது. இதுதான் முக வாதத்துக்கும் பக்கவாதத்துக்கும் உள்ள வித்தியாசம்.

**முகவாதம் எதனால் வருகிறது என்று பார்ப்போம்**

காதில் ஏதாவது தொற்று பாதிப்பு இருந்தாலோ, சிறு, சிறு கொப்புளங்களாக வரும் அக்கி பாதிப்பு இருந்தாலோ, தண்டுவடத்தில் ஏதாவது பாதிப்பு இருந்தாலோ முகவாதம் வர வாய்ப்புள்ளது. ஆனால், இந்தப் பாதிப்புகள் ஒன்றுகூட இல்லாமல் எந்தவித காரணமும் இல்லாமல் முகவாதத்தால் பாதிக்கப்படுபவர்கள்தான் அதிகம்.

முகத்துக்கு வரும் நரம்பு மூளையில் தொடங்கி காது வழியாக வந்து முகத்தை அடைகிறது. குளிர் காற்றால் முகத்துக்கு வரும் நரம்புகள் பாதிக்கப்பட்டு அதனால் முகவாதம் வரும். உதாரணத்துக்கு பஸ்ஸில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந்தோ, காரில் ஏ.சி. போடாமல் ஜன்னல் ஓரம் உட்கார்ந்தோ பயணிக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்போது குளிர்காற்று படுகிறது அல்லது குளிர் சாதன இயந்திரத்தில் இருந்து வரும் காற்று வீசும் பக்கம் இரவு முழுவதும் உட்கார்ந்திருக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அந்தச் சமயம் குளிர் காற்று முகத்தில் தாக்குகிறது. அப்போது நரம்புகள் வீக்கமடைகின்றன. விளைவு முகவாதத்தில் போய் நிற்கிறது.

முகவாதத்தால் சிலருக்கு கண்ணில் இருந்து தண்ணீர் வரும். சிலருக்கு காதில் அதிக சத்தம் கேட்கும். எதிரில் நிற்பவர் மெதுவாக பேசினால் கூட நோய் பாதித்தவர்களுக்கு அதிக சத்தம் கேட்கும். நாக்கில் சுவை குறைவாக இருக்கும். இந்தப் பாதிப்புகளை வைத்து நோயாளி முகவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்கிறோம். காதில் அக்கி வைரஸ் பாதித்தவர்களுக்கும் இந்த மாதிரி முகவாதம் வரும். அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் எதிர்பார்க்கிற முன்னேற்றம் இருக்காது. அவர்களுக்கு கொஞ்சம் வலியும் அதிகமாக இருக்கும். முதல் நாள் வலி குறைவாக இருக்கும், 3ஆவது, 4ஆவது நாள் வலி அதிகமாகும். இப்படி வலி அதிகரித்துக் கொண்டே செல்லும். முகவாதம் வந்தால் அச்சப்படத் தேவையில்லை. இன்றைய காலத்தில் நல்ல மருந்துகள் மற்றும் உடற்பயிற்சிகள் கொடுத்து அதனைச் சரி செய்து விடலாம்.

முக வாதம் வந்தவருக்கு 2 வாரம் மட்டும் குறிப்பிட்ட மாத்திரை கொடுப்போம். அப்போது கண்ணுக்குள் விடுவதற்கு ஒரு சொட்டு மருந்து கொடுப்போம். கண் திறந்திருப்பதால் வறட்சி ஆகி விடும். அதற்காக சொட்டு மருந்து கொடுக்கிறோம். பகலில் 2 மணி நேரத்துக்கு ஒருமுறை திறந்திருக்கும் கண்ணுக்கு அந்த மருந்தைப் போடச் சொல்வோம். களிம்பு ஒன்று கொடுப்போம். அது கண்ணுக்கு உட்பகுதியில் போடக்கூடியது. பின்னர் விட்டமின் மாத்திரை கொடுப்போம்.

அதற்கு அடுத்து முகத்தில் பிளாஸ்டர் ஒன்று ஒட்டச் சொல்வோம். வெளியில் எங்காவது போனால் கண்ணுக்கு பெரிய கண்ணாடி அணியக் கேட்டுக் கொள்வோம். குளிரான பகுதிக்குச் சென்றால் காதை மூடும் வகையில் ஏதாவது அணியச் சொல்வோம். முக வாதத்தின் தீவிரத்தைப் பொறுத்து வைரஸ் எதிர்ப்பு மாத்திரை கொடுப்போம். அது 7 நாட்கள் சாப்பிட வேண்டியதாக இருக்கும்.

2ஆவது முகவாதம் உள்ளவர்களுக்கு நரம்பு பரிசோதனை மேற்கொள்வோம். முகவாதத்தின் தீவிரம் எவ்வாறிருக்கிறது என்பதை லேசான, மிதமான, கடுமையான பாதிப்பு என 3 விதமாகப் பிரித்துக் கொள்வோம். இதில் மிதமான, கடுமையான பாதிப்பாக இருந்தால் குணமாக 4 அல்லது 6 வாரங்கள் ஆகும். 4 வாரம் ஆகியும் கொஞ்சம்கூட முன்னேற்றம் இல்லையென்றால் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். ஏனென்றால், வேறு ஏதாவது நோய்த்தாக்கத்தைக் கூட நாம் முக வாதமாகக் கருதி இருக்கலாம்.

முகத்தில் இடதுபக்கம் வாதம் இருக்கிறது என்றால் வாயின் வலது பக்கமாகக் கோணிக்கொண்டு இருக்கும். நோயாளிகள் என்ன செய்வார்களென்றால், வலது பக்கம் இழுத்து இருக்கிற இடம் தான் பிரச்சினை என்று எண்ணி வலது பக்கம் பயிற்சி செய்வார்கள். அப்படிச் செய்யக் கூடாது. அதனால் நாங்கள் முக்கியமாக சொல்வது கண் எந்தப் பக்கம் மூட முடியாமல் இருக்கிறதோ, அந்தப் பகுதிதான் பிரச்சினை. எனவே, அந்தப் பக்கம்தான் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்போம்.

முக வாத சிகிச்சையில் மருந்து, மாத்திரைகளை விட பிசியோதெரபி மருத்துவர்கள் அளிக்கும் உடற்பயிற்சியே அதிக பலனைக் கொடுக்கும். நாங்கள் கொடுக்கும் மாத்திரை, மருந்துகள் 40 சதவீதம் முதல் 50 சதவீதம் முக்கியம் என்றால் அதேயளவு பிசியோதெரபிஸ்ட் கொடுக்கும் பயிற்சியானது 50இல் இருந்து 60 சதவீதம் முக்கியத்துவம் பெறும்.

பிசியோதெரபிஸ்ட் உடற்பயிற்சி சொல்லிக் கொடுப்பார்கள். மசாஜ் செய்யச் சொல்வார்கள். சில நோயாளிகளுக்கு எலக்ட்ரிக்கல் சிகிச்சையும் தேவைப்படும். இவை அனைத்துக்கும் மேலாக முகவாதத்தால் பாதிக்கப்பட்டோர் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பது முக்கியம் ஆகும். உதாரணத்துக்கு சோப்பு போட்டு குளிக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குளிக்கும் போது கண்ணுக்குள் சோப்பு போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். முதல் ஒன்று அல்லது 2 வாரங்களுக்கு தலைக்கு குளிப்பதை தவிர்க்கலாம். தலைக்கு குளிக்கும் போது காதுக்குள் தண்ணீர் சென்று விடும். காதுக்குள் இருக்கும் தொற்றினால் கூட முக வாதம் வரலாம். அதனால் தலைக்கு குளிப்பதை தவிர்ப்பது நல்லது.





3ஆவது எந்தக் காரணத்துக்காகவும் பயணத்தின் போது கண்ணைத் திறந்த நிலையில் வைத்திருக்கக் கூடாது. கண்ணுக்கு கண்ணாடி அணிந்து செல்ல வேண்டும். கண்ணுக்கு நேராக காற்று அடித்தால் கண்கள் உலர்ந்து போய் விடும். உலர்ந்து போனால் அதிலிருந்து கண்ணீர் வர வாய்ப்புள்ளது. அதற்காக மருத்துவர் ஒரு சொட்டு மருந்து கொடுப்பார். அதனை நாம் தொடர்ச்சியாகப் போட்டுக் கொள்ளலாம். அதற்கு அடுத்தது மின்விசிறிக்கு நேர் கீழே படுக்கக் கூடாது. மின்விசிறியில் இருந்து வரும் காற்று பட்டு கண் உலர்ந்து போகும்.

அதற்கு மேல் நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டியது உடற்பயிற்சி தான். இந்த உடற்பயிற்சியோடு நம் வேலையையும் சேர்த்துக் கொள்ளலாம். தண்ணீர் குடிக்கும் போது டம்ளரில் வெறும் வாயால் குடிக்காமல் ஸ்ரோ வைத்து குடிப்பது ஒரு பயிற்சியாக அமையும். ஸ்ரோவில் உறிஞ்சிக் குடிக்கும்போது கன்னத்தின் 2 பகுதிகளிலும் இருக்கக்கூடிய தசைகள் வேலை செய்யும்.

நிறையப் பேர் வாயை அசைத்துக் கொண்டே இருந்தால் விரைவில் பாதிப்பு சரியாகி விடும் என்று தவறான எண்ணம் கொள்கிறார்கள். அதற்காக பபுள்கம் மெல்ல சொல்வார்கள். நீரிழிவு நோயாளி என்றால் கோதுமையை அள்ளி வாயில் போட்டு மெல்ல சொல்வார்கள். அதெல்லாம் செய்யும்போது என்ன ஆகும் என்றால் அனைத்து தசைகளும் வேலை செய்யும். அப்போது பாதிக்கப்பட்ட தசைகள் மட்டும் அல்லாமல் இயல்பான தசைகளும் வேலை செய்யும். அதனால் நிச்சயமாக பாதிக்கப்பட்ட தசைக்கு பலன் கிடைக்காது. எனவே, இந்த முறை பலனைக் கொடுக்காது. இந்த முறை தவறானது.

முக வாதம் வந்தால் கண்களை மேலே தூக்குவது, புருவத்தை மேலே தூக்குவது, கண் இமைகளை மூடுவது என்பது கடினமாக இருக்கும். 10 முறை உங்கள் கண் புருவத்தை மட்டும் மேலே உயர்த்துங்கள். அப்போது நெற்றியில் சுருக்கம் வந்து விடும். 10 முறை கீழே இறக்குங்கள். கீழே இறக்கும் போது கண்ணை நன்றாக இறுக்கமாக மூடுங்கள். இதே மாதிரி 10 முறை செய்யுங்கள். தொடர்ந்து செய்தால் நல்ல பலனைத் தரும். உடற்பயிற்சிகளை காலை, மாலை என இருவேளை செய்யலாம். ஒவ்வொரு பயிற்சியையும் 10 முறை மேற்கொள்வது சிறப்பானது. கண்ணாடி முன்பு அமர்ந்து செய்வதால் நாம் என்ன செய்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். இதேபோல பல உடற்பயிற்சிகளை பிசியோதெரபிஸ்ட் கற்றுத்தருவார்கள்.மேலும் கைகளால் பாதிக்கப்பட்ட கன்னத்தை வருடும் மசாஜ் சிகிச்சையும் சொல்லித்தருவார்கள். அவர்கள் சொல்வதைப்போல் தொடர்ந்து உடற்பயிற்சிகள், மசாஜ் செய்து வந்தால் முக வாதம் கண்டிப்பாக குணமாகி இயல்பு நிலைக்குத் திரும்பலாம். முக வாதம் வந்துவிட்டதே என்று அச்சம் கொண்டு முடங்கத் தேவையில்லை.

சரியான மருத்துவர், பிசியோதெரபிஸ்ட் ஆகியோரின் ஆலோசனை பெற்று பாதிப்பிலிருந்து மீண்டு வந்து விடலாம்.



டாக்டர் - பக்தவத்சலம்
nfo@kghospital.com
நன்றி - மாலைமலர்

## இன்றைய நாளில்...

- 1798 – பிரான்சில் இராணுவ சேவை கட்டாயமாக்கப் பட்டது.
- 1799 – பாஞ்சாலங்குறிச்சியை மேஜர் பானர்மேன் தலைமையிலான படை முற்றுகையிட்டது.
- 1803 – முதலாவது கண்டிப் போர்க் காலத்தில் ஹங்வெல்லையில் பிரித்தானியப் படைகளினால் கண்டி மன்னன் விக்கிரம ராஜசிங்கனின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
- 1882 – முதலாவது அமெரிக்கத் தொழிலாளர் நாள் ஊர்வலம் நியூயோர்க்கில் இடம்பெற்றது.
- 1902 – சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் 14 மைல் நீளமான தொடருந்துப் பாதை திறக்கப்பட்டது.
- 1969 – மை லாய் படுகொலைகள்: அமெரிக்க இராணுவ அதிகாரி வில்லியம் கலி 109 வியட்நாமியப் பொதுமக்களைப் படுகொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார் .
- 1977 – அமெரிக்கா வொயேஜர் 1 விண்கலத்தை ஏவியது.
- 1980 – உலகின் மிக நீளமான நெடுஞ்சாலைச் சுரங்கமான கோதார்ட் சாலைச் சுரங்கம் (16.224 கிமீ) சுவிட்சர்லாந்தில் திறக்கப்பட்டது.
- 1984 – டிஸ்கவரி விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்துக்கொண்டு பூமிக்குத் திரும்பியது.
- 1990 – கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலைகள்: மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் அகதிகளாகத் தங்கியிருந்த 158 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்

எனக்கென்னவோ ராஜபக்ஷக்களுக்கு கேமை கொடுக்கிறதுக்கு ரணில் ஐயாட ஆக்கள் சனல் 4 சம்பவத்தின் பின்னால இருக்கிறாங்களோ என்ற சந்தேகம் வருகுது...



# நாட்டிலிருந்து தப்பிச்சென்ற 148 பாதாள குழு உறுப்பினர்களுக்கு இன்டர்போல் பிடியாணை

கொலை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களைச் செய்து நாட்டை விட்டுத் தப்பிச்சென்ற பாதாள குழுக்களைச் சேர்ந்த 148 பேரை கைதுசெய்வதற்கு இன்டர்போல் சிவப்பு அறிவிப்பு வெளியிட்டுள்ளதாக குற்றம் மற்றும் சட்டப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார். சந்தேகநபர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில், இலங்கை பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய சர்வதேச பொலிஸார் இந்த சிவப்பு அறிவித்தலை வெளியிட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்துக்கான பாராளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழு பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது. இதன்போதே பிரதி பொலிஸ் மா அதிபர் இத்தகவல்களை தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சந்தேகநபர்களில் சிலர் ஏற்கனவே இலங்கைக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர். இந்தியாவில் 12 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டு அந்நாட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதேவேளை, மரணதண்டனைக் குரிய குற்றங்களைச் செய்த சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பல நாடுகள் மரணதண்டனையை நிராகரிப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக மரணதண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சர்வதேச பொலிஸார் சிவப்பு அறிவித்தலை வழங்க மறுத்திருந்தனர்.

மேலும் அனைத்து பாதாள உலகத் தலைவர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் வசிப்பிடங்கள், புகைப்படங்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதேவேளை, ஒப்பந்தக் கொலைகளில் ஈடுபட்ட பாதாள உலகக் குழுவினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்தோடு அவர்களில் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பெரும்பாலான பாதாள உலகக் குழுக்கள் வெளிநாடுகளிலிருந்தே தமது குற்றச்செயல்களை வழிநடத்து வதாகவும் அவர் கூறியுள்ளார்.


## மோட்டார்சைக்கிள் சந்தை – அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BEU-38XX | BAJAJ | PULSAR 150 NS |
| NC BAZ-05XX | BAJAJ | PULSAR 150 |
| NC BEV-60XX | BAJAJ | CT 100 |
| NC BFA-72XX | BAJAJ | PLATINA |
| NW BIM-78XX | BAJAJ | CT 100 |
| NW BES-97XX | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| NC BHX-68XX | HONDA | DIO SCV 110 |
| NC BFX-86XX | HONDA | DIO SCV 110 |
| CP BHX-90XX | HONDA | DIO SCV 110 |
| WP BGI-80XX | HONDA | DIO SCV 110 |
| NC BGN-61XX | HONDA | DIO SCV 110 |
| NC BIP-82XX | HONDA | DIO SCV 110 |
| WP BIJ-28XX | HONDA | DIO SCV 110 |
| NWBFX-11XX | HONDA | DIO |
| WP BGG-88XX | HONDA | DIO SCV 110 |
| NW BEG-44XX | HONDA | DIO SCV 110 |
| NC BEX-50XX | HONDA | DIO SCV 110 |
| NWBIB-11XX | HONDA | NAVI |
| NW BES-91XX | HONDA | DIO SCV 110 |
| NC BGJ-99XX | HONDA | DIO SCV 110 |
| NC BHU-05XX | HONDA | DIO SCV 110 |
| NC BFK-55XX | HONDA | DIO SCV 110 |
| NC BIG-44XX | YAMAHA | RAY ZR |
| NC BIJ-58XX | YAMAHA | RAY ZR |
| NWBHO-66XX | YAMAHA | RAY ZR |
| NW BHX-11XX | YAMAHA | RAY ZR |
| CP BFB-03XX | YAMAHA | RAY ZR |
| NC BHN-43XX | YAMAHA | RAY ZR |
| NW BIK-84XX | YAMAHA | RAY ZR |
| NC BGQ-56XX | HERO | PLEASURE |
| NWBGV-48XX | TVS | XL SUPER HD |
| NC BDX-48XX | TVS | WEGO |
| NC BHH-19XX | TVS | WEGO |
| NWBFY-02XX | TVS | XL SUPER HD |
| NWBFG-73XX | RANO | Super Cub 110 |
| NWBFN-83XX | RANO | Sweety 125 |
| NWBFR-08XX | RANO | Pattaya 125 |
| NWBEM-23XX | DEMARK | DZR 120cc |

இடம்:–இல: 47/49, யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்.
(யுனிட்டட் மோட்டர்ஸுக்கு முன்பாக)

மோட்டர்சைக்கிள் விற்பனை திகதி:–09.09.2023 காலை 10.30 மணிமுதல்
பார்வையிடும் திகதி:–09.09.2023 (காலை 8.30 முதல் 10.30 வரை)

விஸ்வா :– 0774787096 தரிந்து:–0773147609

துரித அழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:–0710356125

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663


# சுகாதார அமைச்சருக்கு எதிராக புத்தளத்தில் கையெழுத்து நிகழ்வு



ரஸீன் ரஸ்மின்

நாட்டின் சுகாதார சேவைகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அதற்கு மாற்று தீர்வை வழங்குமாறு கோரி, பொதுமக்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (03) புத்தளம், கற்பிட்டி நகரில் இடம்பெற்றன.

ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி கிளையால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளருமான ஹெக்டர் அப்புஹாமி கலந்துகொண்டார்.

இதன்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் கற்பிட்டி அமைப்பாளர் எம்.எவ்.எம்.ரில்மியாஸ், அந்தக் கட்சியின் கற்பிட்டி பிரதேச சபை வேட்பாளர்களான ஏ.ஆர்.எம்.முஸம்மில், எம்.ரிஸ்வி, முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மகத்துன் ரொட்ரிகோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடுகளை நீக்குவதுடன், பொறுப்புள்ள ஒருவரை சுகாதார அமைச்சராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்தியுமே பொதுமக்களிடம் கையெழுத்துகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

கற்பிட்டி நகரில் வாழும் மூவின மக்கள் பெரும் எண்ணிக்கையிலானோர் சுகாதார அமைச்சருக்கு எதிராக கையெழுத்து திரட்டும் ஆவணத்தில் கையொப்பமிட்டனர்.

இதேவேளை, சுகாதார அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாளை 06ஆம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆண்களை ஏமாற்றி கொள்ளையடித்து வந்த தம்பதியினர் பொலிஸாரால் கைது

கொழும்பில் ஆண்களை ஏமாற்றி கொள்ளையடிக்கும் பெண்ணொருவரும் அவரது கணவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண், இரவுநேரத்தில் முச்சக்கரவண்டி சாரதிகளை பாலியல் உறவுக்காக அழைத்துச் சென்று தங்க நகை, பணம் என்பவற்றை கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் இருவரும் ஈடுபட்டு வந்துள்ளனர்.

மொரட்டுவை, எகொட உயன பிரதேசத்தை சேர்ந்த 33 மற்றும் 31 வயதுடைய தம்பதியினரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாணந்துறை புகையிரத நிலை யத்துக்கு அருகில் அதிகாலை 4 மணியளவில் முச்சக்கரவண்டியில் ஏறிய சந்தேக நபரான பெண் பயணம் மேற்கொள்வதுபோன்று நடித்து சாரதியை பாலியல் நடவடிக்கைக்குத் தூண்டி, பின்னர் பாழடைந்த இடத்துக்கு அழைத்துச் சென்ற சம்பவமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு பாலியல் நடவடிக்கைக்கு தயாராகிக் கொண்டிருந்தபோது அருகில் மறைந்திருந்த கணவர் முச்சக்கரவண்டி சாரதியை தாக்கி கழுத்தில் இருந்த இரண்டரை பவுண் தங்க நகையை திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதன்படி செயற்பட்ட தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் உபுல் பிரியங்கர உள்ளிட்ட அதிகாரி கள் சந்தேகநபரான தம்பதியை கைதுசெய்து கொள்ளையடிக்கப்பட்ட நகையை மீட்டுள்ளனர்.

கொழும்பில் ஆண்களை ஏமாற்றி கொள்ளை யடிக்கும் பெண் தொடர்பில் இதற்கு முன்னரும் இதுபோன்ற முறைப்பாடுகள் அளிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்படும் என்றும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடுத்தர வயதுடையவர்கள் இதுபோன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் முறைப்பாடு செய்ய வெட்கப்படுவதாக கூறப்படுகிறது. சந்தேகத்திற்குரிய தம்பதிகள் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# 2022இல் 238.5 மில்லியன் நாணயத்தாள்கள் அழிப்பு

இலங்கை மத்திய வங்கி கடந்த ஆண்டு சேதமடைந்த அல்லது சிதைக்கப்பட்ட 238.5 மில்லியன் நாணயத்தாள்களை அழித்துள்ளது.

மத்திய வங்கியின் கூற்றுப்படி, 2022இல் அழிக்கப்பட்ட நோட்டு களின் பெறுமதி 207.3 பில்லியன் ரூபா என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சுத்தமான மற்றும் தரமான நாணயத்தாள்களின் புழக்கத்தை உறுதிசெய்வதற்காக மத்திய வங்கி அவ்வப்போது சிதைக்கப்பட்ட நாணயத்தாள்களை அழித்து வருகிறது.

மத்திய வங்கி 2021இல் 108.2 மில்லியன் ரூபா மதிப்புள்ள நாணயத்தாள்களை அழித்துள்ளதுடன், அதன் பெறுமதி 44.3 பில்லியன் ரூபாவாகும், 2020ஆம் ஆண்டில் 127.3 மில்லியன் ரூபா மதிப்பிழந்த நாணயத்தாள்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பெறுமதி 62.2 பில்லியன் ரூபா வாகும்.

மேலும், 2019ஆம் ஆண்டில், 139.8 பில்லியன் ரூபா பெறு மதியான 235 மில்லியன் நாணயத் தாள்கள் மத்திய வங்கியால் அழிக்கப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டில் மொத்தமாக 343.8 மில்லியன் சிதைக்கப்பட்ட நாணயத்தாள்கள் அழிக்கப் பட்டதுடன், மத்திய வங்கியின்படி புழக்கத்திலிருந்து எடுக்கப்பட்ட நோட்டுகளின் மதிப்பு 252.2 பில்லியன் ரூபாவாகும்.


சூடான செய்திகளுக்கு உடன் இணைந்திருங்கள் thamilan.lk

## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

FREE NVQ3

### மின்னியலாளர்கள் உட்பட பயன்பாட்டுத் தொழிலிலுள்ள தொழில்நுட்ப வல்லுனர்களை மேம்படுத்தும் தேசிய திட்டம்

4 நாட்களில்

முதல் கட்டத்தின் கீழ், அனுபவம் வாய்ந்த மின்னியலாளர்களுக்கு இலவசமாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 3 (NVQ 3) வரை வழங்குவதற்கான விரைவுத் திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. ஒரு வருடம் மற்றும் 06 மாதங்களுக்கு அதிகமான தொழில் அனுபவமுள்ள, தற்போதும் தொழில் புரியும் அனைத்து மின்னியலாளர்களும் இந்த திட்டத்திற்காக விண்ணப்பிக்கலாம். பரீட்சை கட்டணம், பயிற்சி, இறுதிப் பரீட்சைக்கான மூலப்பொருட்கள் மற்றும் அவற்றுக்காள செலவுகளை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் ஏனைய அனுசரனையாளர்களால் வழங்கப்படும். பயிற்சி மற்றும் இறுதி பரீட்சைக்கு வசதியான மாவட்டத்தை நீங்களே தெரிவு செய்யலாம்.

விண்ணப்பிக்க, பெயர் மற்றும் மாவட்டத்தை 0770399119 வாட்ஸ்அப் செய்யவும்

Online மூலமாக facebook.com/pucsl அல்லது www.pucsl.gov.lk அணுகவும்

தேசிய தொழிற்தகைமை மட்டம் 3 அல்லது அதற்கு மேல் பெற்ற மின்னியலாளர்களுக்கு தொழிற்கல்வி அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது

- சோலார் தொழில்நுட்ப வல்லுநர்கள்
- நீர்க்குழாய் பொருத்துனர்கள்
- ஏசி மற்றும் குளிர்சாதன தொழில்நுட்ப வல்லுநர்கள்
- தச்சு வேலை வல்லுநர்கள் (கூரை அமைப்பவர்கள்)
- வெல்டிங் / வர்ணம் பூசுபவர் (பெயின்டர்)

மின்சார பாதுகாப்பு, மின்சார சேமிப்பு, புதுப்பிக்கத்தக்க சக்திவலு அபிவிருத்தி, நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு அதிகாரமளித்து, அவர்களை தரப்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நடைபெற்று வருகிறது.

**தகவல்களுக்கு 0770399119 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்**

பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ
தலைவர்
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
6 வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இல.28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: (011)2392607/8 பெக்ஸ்: (011) 2392641



## மோட்டார்சைக்கிள் சந்தை – கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி | வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|---|---|---|
| WP BGR-04XX | BAJAJ | PULSAR 200 NS | SP BFQ-00XX | YAMAHA | FZ VERSION 02.00 |
| NW BGI-14XX | BAJAJ | PULSAR 150 | SG BFS-01XX | YAMAHA | RAY ZR |
| WP BFG-17XX | BAJAJ | CT 100 | SP BFS-04XX | YAMAHA | FZ VER 2.0 |
| WP BFW-22XX | BAJAJ | PULSAR 160 | WP BIO-05XX | YAMAHA | MT 15 |
| WP BHL-27XX | BAJAJ | CT 100 | WP BGI-20XX | YAMAHA | RAY ZR |
| WP BCI-47XX | BAJAJ | PULSAR 135 | WP BGT-35XX | YAMAHA | RAY ZR |
| SG BFT-52XX | BAJAJ | CT 100 | WP BDA-47XX | YAMAHA | FZ |
| WP BCS-51XX | BAJAJ | PLATINA | NW BGU-53XX | YAMAHA | FZ VERSION 2.00 |
| EP BDK-53XX | BAJAJ | PULSAR | WP BFF-53XX | YAMAHA | FZ VERSION 02 |
| WP BAW-56XX | BAJAJ | PULSAR 180 | WP BGF-55XX | YAMAHA | RAY ZR |
| WP BCP-58XX | BAJAJ | PULSAR 150 | WP BDX-58XX | YAMAHA | FZ - S |
| WP BCI-72XX | BAJAJ | PULSAR | WP BIY-62XX | YAMAHA | MT 15 |
| SP BII-93XX | BAJAJ | PULSAR 150 | SG BGL-62XX | YAMAHA | RAY ZR |
| WP BDV-66XX | BAJAJ | PLATINA | SP BEQ-64XX | YAMAHA | FZ |
| WP BAC-68XX | BAJAJ | CT 100 | SG BES-72XX | YAMAHA | RAY ZR |
| SP BDZ -68XX | BAJAJ | PLATINA | WP BIN-73XX | YAMAHA | RAY ZR |
| SP BDU-62XX | BAJAJ | PULSAR | UP BGS-75XX | YAMAHA | ZR |
| SP BDP-19XX | BAJAJ | CT100 | WP BIJ-81XX | YAMAHA | FZ VERSION 03 |
| SP BBP-77XX | BAJAJ | PULSAR | WP BHF-82XX | YAMAHA | FZ VERSION 2.00 |
| SP BHZ-99XX | HONDA | DIO | SG BHD-83XX | YAMAHA | RAY ZR |
| WP BGL-96XX | HONDA | DIO SCV 110 | WP BGE-99XX | YAMAHA | RAY ZR |
| SGBGH-85XX | HONDA | DIO | SP BFS-04XX | YAMAHA | FZ |
| WP BEX-88XX | HONDA | DIO | SG BID-04XX | YAMAHA | FZ |
| SP BEV-88XX | HONDA | DIO | UP BGK-63XX | YAMAHA | FZ |
| WP BCN-89XX | HONDA | DIO | SP BBC-68XX | YAMAHA | FZ |
| CP BGV-91XX | HONDA | DIO | SP BHU-40XX | YAMAHA | FZ |
| WP BFU-78XX | HONDA | DIO | WP BGW-94XX | HERO | MAESTRO EDGE |
| WP BIO-72XX | HONDA | DIO | WP BHJ-70XX | HERO | MAETRO EDGE |
| WP BFZ-73XX | HONDA | DIO | SP BDV-33XX | HERO | PLESURE |
| WP BFE-63XX | HONDA | DIO | SP BHG-59XX | TVS | WEGO |
| WP BII-60XX | HONDA | DIO SCV 110 | SP BHN-76XX | TVS | NTORQ |
| WP BID-61XX | HONDA | DIO | SP BIL-05XX | TVS | NTORQ |
| WP BES-61XX | HONDA | DIO | CP BIC-23XX | TVS | NTORQ |
| WP BHD-59XX | HONDA | DIO | WP BHH-24XX | TVS | NTORQ |
| WP BFX-54XX | HONDA | DIO | CP BAQ-58XX | TVS | WEGO |
| UP BCL-53XX | HONDA | DIO | WP BIQ-53XX | TVS | NTORQ |
| WP BGT-48XX | HONDA | DIO | SG BIQ-35XX | TVS | NTORQ |
| WP BGS-52XX | HONDA | DIO | SG BGV-37XX | TVS | SCOOTY PEPT |
| WP BEA-43XX | HONDA | DIO | WPBFC-74XX | DEMARK | RINOS |
| SP BEG-43XX | HONDA | DIO | CP QS-83XX | BAJAJ | 4stroke |
| WP BDW-45XX | HONDA | DIO | WP QM 93XX | BAJAJ | 4stroke |
| WP BHN-45XX | HONDA | GRAZIA | WP AAU 93XX | BAJAJ | 4stroke |
| WP- BHZ-38XX | HONDA | DIO | CP QL-94XX | BAJAJ | 4stroke |
| WP BCM-41XX | HONDA | DIO | WP QV-96XX | BAJAJ | 4stroke |
| WP BII-35XX | HONDA | DIO | WP QS-97XX | BAJAJ | 4stroke |
| SG BIT-29XX | HONDA | DIO | CP QK-81XX | BAJAJ | 4stroke |
| WP BDO-29XX | HONDA | DIO | SP YR 73XX | BAJAJ | 4stroke |
| WP BIB-23XX | HONDA | CB HORNET | WP QD-69XX | BAJAJ | 4stroke |
| SP BHX-23XX | HONDA | GRAZIA | SP AAD-63XX | BAJAJ | 4stroke |
| NW BHY-23XX | HONDA | DIO | CP YL-63XX | BAJAJ | 4stroke |
| WP BGN-19XX | HONDA | DIO | CP QT 63XX | BAJAJ | 4stroke |
| WP BIQ-07XX | HONDA | DIO | WP QS-60XX | BAJAJ | 4stroke |
| UP BFV-08XX | HONDA | DIO | WP AAR-52XX | BAJAJ | 4stroke |
| NW BIG-15XX | HONDA | DIO | WP QS 46XX | BAJAJ | 4S |
| SP BFJ-04XX | HONDA | DIO | CP YK-43XX | BAJAJ | 4stroke |
| WP BCJ-01XX | HONDA | DIO | WP QT-36XX | BAJAJ | 4stroke |
| SP BHA-14XX | HONDA | DIO | WP QQ 27XX | BAJAJ | AUTO AR4S |
| SP BFR-98XX | HONDA | DIO | SG QK-19XX | BAJAJ | 4stroke |
| SP BHC-30XX | HONDA | DIO | WP ABH-05XX | BAJAJ | 4stroke |
| SP BFG-04XX | HONDA | DIO | CP AAF-06XX | BAJAJ | 4stroke |
| SP BGH-53XX | HONDA | DIO | CP QV-11XX | BAJAJ | 4stroke |
| SP BGR-64XX | HONDA | DIO | CP YK 11XX | BAJAJ | 4stroke |
| SP BGX-30XX | HONDA | DIO | CP AAH 12XX | BAJAJ | 4stroke |
| SP BBC-56XX | HONDA | DIO | SP ABG-01XX | BAJAJ | 4stroke |
| SP BGG-11XX | HONDA | DIO | WP QG-54XX | BAJAJ | 2stroke |
| SP BHW-57XX | HONDA | DIO | CP JY-07XX | BAJAJ | 2stroke |
| SP BGK 04XX | HONDA | DIO | BEK-82XX | DEMARK | WARRIOR |
| SP BGA-45XX | HONDA | DIO | WP PY-98XX | DFSK | EQ1020DR |
| SP BFW-73XX | HONDA | DIO | 227-30XX | MAZDA | TITAN |
| SP BIB-81XX | HONDA | DIO | WP BGR-69XX | HONDA | GRAZIA |
| SP BGM-45XX | HONDA | DIO | SP GV 30XX | TOYOTA | RAV 04 |
| SP BIJ-29XX | HONDA | DIO | CP KG 73XX | CHEVROLET | AV-EO |
| SP BGG-96XX | HONDA | DIO | WP HA 75XX | MERCEDES-BENZ | C200KOMORESSOR |
| SP BGY-18XX | HONDA | DIO | WP ZB-17XX | JCB | 3CX |

2023 செம்டெம்பர் 06ஆம் திகதி (காலை 8.30 முதல் 4.30 வரை)
இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி,
கொட்டாவையில் அமைந்துள்ள எமது நிறுவன
வாகன வளாகத்தில் பார்வையிடலாம்

விற்பனை திகதி: 07–09–2023|காலை10.30 மணிக்கு

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

விஸ்வா:– 0774787096 சுஜீவா:–0712591067

துரித அழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:–0710356125

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ඒ එන් අල්ගෙවත්ත ඕක්ෂනිය(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம்,
146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# கடும் காற்றால் லயன் குடியிருப்பு பகுதி கூரைத் தகடுகள் பறந்தன

## பொறுப்பானவர்கள் இதுவரை சென்று பார்வையிடவில்லையென மக்கள் கவலை






*மஸ்கெலியா நிருபர்*

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள சாமிமலை, ஸ்ரஸ்பி தோட்ட அவரவத்தைப் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு வீசிய கடும் காற்றினால் தோட்டத் தொழிலாளர்கள் தங்கியிருக்கும் லயன் குடியிருப்பு பகுதியில் கூரைத் தகடுகள் பறந்தன.

அந்தக் குடியிருப்புப் பகுதியிலிருந்த மக்கள் உறவினர் இல்லங்களில் தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

இது குறித்து அப்பகுதிக்கு இடர் முகாமைத்துவ குழுவினரோ கிராம உத்தியோகத்தரோ சென்று பார்வையிடவில்லையென அந்தக் குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# நீர்க்கசிவுகளை ஒரு மாதத்துக்குள் அடைக்க பொறியியலாளர்கள் முயற்சி

*ஏ.ஏ.எம்.பாயிஸ்*

சமனலவெவ நீர்த்தேக்கத்தில் ஆறு நீர்க்கசிவுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர்கள் நடத்திய ஆய்வு நடவடிக்கைகளின்போதே இவ்விடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சமனலவெவ நீர்த்தேக்க பொறியியலாளர் பிரிவு நேற்று தெரிவித்தது.

இதேவேளை, நீர்க்கசிவு இருக்கும் என அனுமானிக்கப்பட்ட இடங்களில் நீல நிற சாயத்தைக் கொட்டி அதன்மூலம் நீலநிற நீர் வெளியாகும் பகுதிகளில் நீர்க்கசிவுள்ள இடத்தைக் கண்டுபிடிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நீர்க்கசிவு சமனலவெவ நீர்த்தேக்கத்தின் தென் பகுதியிலுள்ளதாகவும் அனுமானிக்கப்பட்டுள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர். நீர்த்தேக்கத்தில் நீர் குறைவாக உள்ள இந்நிலைமை பெரும்பாலும் சுமார் ஒரு மாத காலத்துக்கே நீடிக்குமென எதிர்பார்க்கப்படுவதால் இக்காலப் பகுதிக்குள் இப்பணியை நிவர்த்தி செய்ய முயற்சிப்பதாகவும் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# கனகாம்பிகை துரை மனோகரனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம்





*ஜே.எம். ஹாபீஸ், ஆர்.ஏ. இராமன்*

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் துரை மனோகரனின் துணைவியார் திருமதி கனகாம்பிகை துரைமனோகரனது இரண்டாம் ஆண்டு நினைவு தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03)கண்டி வீரகெப்பட்டிப்பொல நினைவு மண்டபத்தில் இடம்பெற்றது.

மலையக கலை, கலாசார சங்கம் (இரத்தினதீபம் அமைப்பு) இதனை ஒழுங்கு செய்திருந்தது.

கலாநிதி துரை மனோகரனின் குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் பெருமளவில் பங்கு கொண்டனர்.

உத்தியோகப்பற்றற்ற நீதவானும் சட்டத்தரணியுமான கலாநிதி ஏ.எம்.வைஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார். ஏனைய பிரமுகர்கள் அவரது உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தனர்.

# கண்டி பெரஹெரா பார்க்க வந்தவர்கள் விட்டுச்சென்ற கழிவுப் பொருட்கள் 250 தொன்

*கண்டி நிருபர்*

கண்டி பெரஹெரா இடம்பெற்ற 15 தினங்களில் மட்டும் கண்டி நகரில் 250 தொன் கழிவுப் பொருட்கள் சேர்ந்ததாக கண்டி மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பொறியியலாளர் நாமல் திசாநாயக்கா நேற்று (04) தெரிவித்தார்.

கடந்த தினங்களில் அவை கண்டி, கொஹாகொடை கழிவு மத்திய நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்,

பெரஹெராவை பார்வையிட வந்தவர்கள் எடுத்துவந்த பிளாஸ்ரிக் பொருட்கள், தண்ணீர் போத்தல்கள், உணவு பொதி செய்த கழிவுகள், பொலித்தீன் பைகள், விளையாட்டுப் பொருட்கள் என பலதரப்பட்ட பொருட்கள் அதில் அதிகமாக உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

குறிப்பாக, எஞ்சிய உணவுப் பொருட்கள் சுமார் 10 தொன் அளவிலும் பிளாஸ்ரிக் பொருட்கள் 5 தொன் அளவிலும் தினமும் சேர்ந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய பிக்கு வார்ட் திறப்பு




*இரத்தினபுரி நிருபர்*

எஹலியகொடை, பனாவல ஆயுர்வேத வைத்தியசாலையின் புதிய பிக்கு வார்ட் தொகுதி திறந்து வைக்கும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் சனிக்கிழமை (02) இடம்பெற்றது.

அவிசாவளை முண்டிகல ஆரண்ய விகாராதிபதி அசரண சரண மில்லேவே மஹிந்த தேரர் துறவியாகி 41 ஆவது வருடத்தை முன்னிட்டு மேற்படி வார்ட் தொகுதி அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அனைத்து வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்ட இந்த வார்ட் தொகுதியில் இரத்தினபுரி, அவிசாவளை, எஹலிய கொடை உள்ளிட்ட பல பிரதேசங்களில் உள்ள பிக்குகள் மருத்துவ வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் உள்ளூர் மருத்துவ பேராசிரியர் செனரத் பண்டார ஜயசூரிய, சப்ரகமுவ மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன, அக்சிதான சங்கத்தின் தலைவர் சுமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வடமாகாணத்தில் நடத்தப்பட்ட ஆங்கில மொழித்திறன் போட்டியில் முறைகேடு

## பாதிக்கப்பட்ட தரப்பினர் சுட்டிக்காட்டு

*சாவகச்சேரி நிருபர்*

வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட ஆங்கில மொழித்திறன் போட்டியில் முறைகேடு இடம்பெற்றிருப்பதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சுட்டிக்காட்டியதுடன், இது தொடர்பாக மேல் மட்ட அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டுசெல்லவிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த 02ஆம் மற்றும் 03ஆம் ஆகிய இரு தினங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் மாகாண மட்ட ஆங்கில மொழித்திறன் போட்டிகள் இடம்பெற்றன. இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் இடம்பெற்ற ஆங்கில மொழித்திறன் போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

குறித்த போட்டிகளுக்கு நான்கு மத்தியஸ்தர்கள் கடமை வகித்திருந்த நிலையில், சகல திறன் போட்டிகளும் பாடசாலையின் மூடிய அறைகளிலேயே இடம்பெற்றிருந்தன. குறித்த போட்டிகளுக்கு பாடசாலை மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் வந்திருந்தபோதிலும் அவர்களுக்கு போட்டியை பார்வையிட அனுமதி வழங்கப்படவில்லை.

இதனால் குறித்த மாகாண மட்ட ஆங்கில மொழித்திறன் போட்டிகளில் திறமை உள்ள மாணவர்கள் புறந்தள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது. குறிப்பாக ஆங்கில பேச்சுப் போட்டியைகூட மூடிய அறைக்குள்ளேயே நடத்தினர்.

மண்டபத்தில் பலரும் பார்வையிட நடத்தப்பட வேண்டிய பேச்சுப் போட்டியைக் கூட மூடிய அறைக்குள் நடத்தக் காரணம் என்ன? இந்த போட்டிகளில் வெளிப்படைத்தன்மை இல்லை. மூடிய அறைக்குள் நடத்த இது என்ன தொழில் வாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சையா?

எனவே, மாகாண மட்டத்திலான ஆங்கில மொழித்திறன் போட்டிகளை வெளிப்படைத்தன்மை கொண்டதாக மீளவும் திறந்த மண்டபத்தில் நடத்தி கல்விச் சமூகம், பெற்றோர் மற்றும் போட்டியாளர்களான மாணவர்களின் சந்தேகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என மேலும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

மேற்படி போட்டிக்கு பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு மத்தியிலும் வடக்கு மாகாணத்தின் பல பாடசாலைகளில் இருந்தும் மாணவர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலாபம் தரும் சொத்துகளையெல்லாம் விற்பதென்பது தவறான நடவடிக்கை

## பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவிப்பு



*பு.கஜிந்தன்*

மக்கள் ஆணை இல்லாத ஜனாதிபதி, மக்கள் ஆணையுள்ள ஜனாதிபதி என்பதல்ல பிரச்சினை. நாட்டின் வளங்களை தேவையற்ற விதத்தில் விற்று நாட்டை குட்டிச்சுவராக்குவதை யார் செய்தாலும் அது தவறு. மக்கள் ஆணை என்பதைக் காட்டிலும் அவர் அரசியலமைப்பு ரீதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அது அவரது பிழை அல்ல - என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (03) அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒருவர் இராஜினாமா செய்தால் அந்த இடைக்காலத்துக்கு கட்டாயமாக ஒருவர் இருக்கவேண்டும். அரசியலமைப்பானது அதற்கான இடத்தைக் கொடுத்துள்ளது. அதனடிப்படையில்தான் அவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அடுத்ததாக அரச சொத்துகளை விற்பதை அவர் மிக மிகக் கவனமாகக் கையாள வேண்டும். இலாபம் தரும் சொத்துகளையெல்லாம் விற்பதென்பது மிகவும் ஒரு தவறான நடவடிக்கை. அவர் அதனை மிகவும் கவனமாக கையாள வேண்டும்.

அது மாத்திரமல்ல, நேற்றுத்தான் (02ஆம் திகதி சனிக்கிழமை) ஒரு விடயத்தை அறிந்தேன். இந்த பாடசாலைகள், அரச சொத்துகள், அதாவது முக்கியமாக கல்லூரிகள், பல்கலைக்கழகங்களின் காணிகள் எல்லாம் அடகு வைப்பதற்கு முடியுமா என பரிசீலிப்பதாக.

கோப்பாய் கல்வியற் கல்லூரியின் 206 பரப்புடைய எனது பரம்பரை காணியை, எனது தந்தையாரின் பெயரால் நான்தான் கொடுத்திருந்தேன். அதற்கு நான் உறுதியும் எழுதிக் கொடுத்துவிட்டேன். அவர்கள் அதனை தொலைத்துவிட்டு தற்போது தேடியெடுக்க வேண்டும் என்று சொல்கின்றார்கள்.

நான் ஏன் என்று கேட்டதற்கு எனக்கு ஒரு வேடிக்கையான காரணம் சொல்லப்பட்டது. அதாவது, இவற்றை எல்லாம் அடகு அல்லது ஈடு வைக்கலாமா என்று பார்ப்பதற்கு என்று எனக்கு சொல்லப்பட்டது.

அரச சொத்துகளை எல்லாம் அடகு வைப்பது, ஈடு வைப்பது, விற்பது இப்படியான ஒரு செயற்பாடு நடக்கும் என நான் கருதவில்லை. அதிலும் பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றை எல்லாம் அடகு வைப்பதென்பது மிகவும் பிழையான விடயம்.

இது நான் கேள்விப்பட்ட விடயம். உறுதிப்படுத்தப்படவில்லை. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை நடக்க முடியாத விடயம் இல்லை. நடப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆகவே, இவற்றையெல்லாம் ஒரு நாட்டை குட்டிச்சுவராக்கும் நடவடிக்கையாகவே நான் பார்க்கின்றேன் – என்றார்.

# மன்னார் வங்காலையில் இடம்பெற்ற மாபெரும் குருதிக்கொடை முகாம்




*மன்னார் நகர் நிருபர்*

மன்னார், வங்காலை புனித ஆனாள் ஆலய பங்கு மக்களுடன் வன்னி மண் அறக்கட்டளை இணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் குருதிக்கொடை முகாம் நேற்று முன்தினம் (03) ஞாயிற்றுக்கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலய வளாகத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 2.00 மணிவரை நடைபெற்றது.

''உதிரத்தை தானம் செய்! உதிரப் போகும் ஒரு உயிர் உதிராமல் இருக்க காவல் செய்!'' என்ற நோக்கத்துக்காக நடைபெற்ற இரத்ததான முகாமுக்கு நிதி அனுசரணை யாழ். மதர் கெயார் வைத்தியசாலை உரிமையாளர் வைத்திய கலாநிதி குலசிங்கம் சுரேஷ்குமார் வழங்கினார்.



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை இரத்த வங்கியினர் உதவிகளை வழங்கியிருந்தனர். சுமார் 50இற்கும் மேற்பட்ட குருதி கொடையாளர்கள் குருதி தானம் செய்திருந்தமை விசேட அம்சமாகும்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சாவகச்சேரியில் நஞ்சருந்தி முதியவர் உயிர் மாய்ப்பு

*சாவகச்சேரி செய்தியாளர்*

தென்மராட்சி-அல்லாரை பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் (03) ஞாயிற்றுக்கிழமை நஞ்சருந்தி உயிரை மாய்த்துள்ளார்.

நஞ்சருந்தி உயிருக்குப் போராடிய முதியவரை உறவினர்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் அல்லாரை தெற்கு, மீசாலைப் பகுதியைச் சேர்ந்த 80 வயதான முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் சிறைக்கைதிகளுக்கு பயிற்றுவிப்பதற்கான சலூன் (முடி வெட்டும் நிலையம்) ஒன்று கடந்த சனிக்கிழமை (02) வேலுப்பிள்ளை சிவனேஸ்வரனது நிதிப் பங்களிப்பில், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தராஜாவின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.**

**படங்கள்:** சாவகச்சேரி நிருபர்

# உலக செய்திகள்

## காபோனில் ஆட்சிக் கவிழ்ப்பு

# இடைக்கால ஜனாதிபதியாக ஜெனரல் பிரைஸ் நிகுமா பதவியேற்பு



காபோனில் ஏற்பட்ட இராணுவப் புரட்சியை அடுத்து, ஆட்சியை கவிழ்த்த இராணுவக்குழுவின் தலைவரான ஜெனரல் பிரைஸ் நிகுமா, நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக நேற்று பதவியேற்றுக் கொண்டுள்ளார்.


இதன்மூலம் 55 ஆண்டுகால அலி போங்கோவின் குடும்ப ஆட்சியின் தொடர்ச்சியாக ஜெனரல் நிகுமாவின் ஆட்சி இருக்கும் என்ற கருத்தும் எழுந்துள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடான காபோனில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அலி போங்கோ ஒண்டிம்பா வெற்றி பெற்று 3ஆவது முறையாகவும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால், இந்த தேர்தலில் அலி போங்கோ வெற்றி பெற்றது செல்லாது என்று போர்க்கொடி தூக்கிய அந்நாட்டு இராணுவம் திடீரென கிளர்ச்சியில் ஈடுபட்டு கடந்த மாதம் 30ஆம் திகதி ஆட்சியை கவிழ்த்ததுடன், அதிகாரத்தை கைப்பற்றியது. ஜனாதிபதி அலி போங்கோ வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டார். இதன்மூலம் 55 ஆண்டுகால குடும்ப ஆட்சி முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆட்சியை கவிழ்த்த இராணுவக்குழுவின் தலைவரான ஜெனரல் பிரைஸ் நிகுமா, நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக நேற்று பதவியேற்றார். ஜெனரல் பிரைஸ் நிகுமாவுக்கு ஓரளவுக்கு மக்கள் ஆதரவும் உள்ளது. எனினும், 55 ஆண்டுகால அலி போங்கோவின் குடும்ப ஆட்சியின் தொடர்ச்சியாக ஜெனரல் நிகுமாவின் ஆட்சி இருக்கும் என்ற கருத்தும் எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நோபல் பரிசு விழாவில் பங்கேற்க ரஷ்யா - ஈரான் - பெலாரஸுக்குத் தடை



சுவீடனில் நடைபெறவுள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்து கொள்ள ரஷ்யா, பெலாரஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் தூதுவர்களை அழைக்கப் போவதில்லை என்று நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது.


உக்ரைன் மீதான படையெடுப்பு காரணமாக, ரஷ்யா மற்றும் அதன் நட்பு நாடான பெலாரஸ் தூதுவர்களை கடந்த ஆண்டு நோபல் அறக்கட்டளை புறக்கணித்திருந்தது. இந்நிலையில், ஓகஸ்ட் 31ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பில் கடந்த ஆண்டு புறக்கணிக்கப்பட்ட நாடுகளின் தூதுவர்கள் இந்த ஆண்டு அழைக்கப்படுவார்கள் என்று தெரிவித்திருந்தது.

நோபல் அறக்கட்டளையின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு, ஈரான் அரசின் மனித உரிமை மீறல் மற்றும் பெலாரஸ் ஜனாதிபதி சட்டவிரோத ஆட்சி ஆகியவற்றை கண்டிக்கும் விதமாக இந்த விழாவை புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

இதனையடுத்து, ரஷ்யா, ஈரான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் ஸ்டாக்ஹோமில் நடைபெறவுள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்துகொள்ள தடை விதிக்கப்படுவதாக நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது. இந்த அறிவிப்புக்கு பல்வேறு நாட்டு தலைவர்கள் சமூக வலைதளங்களில் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

## 'ஸ்லீப்பிங் மூட்' இல் ஓய்வெடுக்கும் விக்ரம்

# லேண்டரை மீண்டும் 40 செ.மீ. உயர்த்தி வெற்றிகரமாக தரையிறக்கிய இஸ்ரோ




நிலவில் தரையிறங்கியுள்ள விக்ரம் லேண்டர் பணிகளை முடித்துவிட்டு தற்போது 'ஸ்லீப்பிங் மூட்' இல் ஓய்ந்திருக்கும் நிலையில், இஸ்ரோ விஞ்ஞானிகள் விக்ரம் லேண்டரை 40 சென்றிமீற்றர் உயர்த்தி, 30-40 சென்றிமீற்றர் தொலைவில் மீண்டும் பாதுகாப்பாக வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளனர்.

இதற்கான முக்கியத்துவம் என்னவென்றால், இந்த 'கிக்-ஸ்டார்ட்' எதிர்காலத்தில் விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறக்கும் திட்டத்துக்கு முன்மாதிரியாக இருக்கும். அனைத்து அமைப்புகளும் சரியாக செயற்படுகின்றன மற்றும் ஆரோக்கியமாக உள்ளன. லேண்டரிலுள்ள ChaSTE மற்றும் ILSA ஆகிய ஆய்வு கருவிகள் தரையிறங்கிய பின்னர் மீண்டும் சோதனை செய்யப்பட்டுள்ளது என இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக கடந்த ஜூலை 14ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ள சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த ஓகஸ்ட் 23ஆம் திகதி நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இதனையடுத்து விக்ரம் லேண்டரிலிருந்து வெளிவந்த பிரக்யான் ரோவர் நிலவில் தரையிறங்கி, அதில் பொருத்தப்பட்டுள்ள ஆய்வுக் கருவிகளின் உதவியுடன் ஆராய்ச்சி செய்து வந்தது.

பிரக்யான் ரோவர் கலனில் ஆல்ஃபா துகள் எக்ஸ்ரே நிறமாலைமானி (ஏ.பி.எக்ஸ்.எஸ்.), லேசர் ஒளிக்கற்றையால் தூண்டப்பட்ட முறிவு நிறமாலைமானி (எல்.ஐ.பி.எஸ்.) ஆகிய இரு அறிவியல் ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

விக்ரம் லேண்டர் தரையிறங்கிய இடத்தில் இருந்து 500 மீற்றர் சுற்றளவில் வலம் வரத் திட்டமிட்டுள்ள பிரக்யான் ரோவர், நிலவில் மண், கற்கள், தன்மை, தனிமங்கள், வேதிக்கலவை போன்றவற்றை ஆய்வுக்குட்படுத்தி வருகிறது.

பிரக்யான் ரோவர் 100 மீற்றர் தொலைவுக்கு தனது பயணத்தை மேற்கொண்டதாக இஸ்ரோ தெரிவித்தது. மேலும், பிரக்யான் ரோவர் பயணித்த தடத்தை சுட்டிக்காட்டும் படத்தையும் இஸ்ரோ வெளியிட்டது.

இந்நிலையில், சந்திரயான் -3இன் விக்ரம் லேண்டரை 40 சென்றிமீற்றர் உயர்த்தி, 30-40 செ.மீ. தொலைவில் மீண்டும் பாதுகாப்பாக இஸ்ரோ தரையிறக்கியது.

மேலும், நிலவின் தென் பகுதியிலுள்ள லேண்டரின் அனைத்து கருவிகளும் சரியாக உள்ளன என்றும் இந்த செயற்பாடு எதிர்காலத்தில் விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறங்கும் திட்டத்துக்கு முன்மாதிரியாக இருக்கும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்நிலையில் நிலவில் தரையிறக்கப்பட்டுள்ள விக்ரம் லேண்டர் நேற்று காலை 08 மணி முதல் ஸ்லீப் மூடில் வைக்கப்பட்டுள்ளது என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் எக்ஸ் (ட்விட்டர்) தளத்தில்,

''விக்ரம் லேண்டர் நேற்று காலை 08:00 மணியளவில் ஸ்லீப் மூடில் வைக்கப்பட்டுள்ளது. முன்னதாக, விக்ரம் லேண்டர் உயர்த்தப்பட்டு வேறு இடத்தில் இதமாக தரையிறக்கப்பட்டது. இதையடுத்து, புதிய இடத்தில் விக்ரம் லேண்டரிலுள்ள ChaSTE, RAMBHA-LP மற்றும் ILSA ஆகியவை சோதிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவு பூமியில் பெறப்பட்டது. பேலோட்கள் இப்போது அணைக்கப்பட்டுள்ளன. லேண்டர் ரிசீவர்கள் இயக்கத்தில் வைக்கப்பட்டுள்ளன. சூரிய சக்தி தீர்ந்து பெட்டரி தீர்ந்தவுடன் விக்ரம் லேண்டர், பிரக்யான் ரோவரின் அருகில் ஸ்லீப் மூடிலிருக்கும். எதிர்வரும் 22ஆம் திகதி இருவரும் விழித்தெழுவார்கள் என்று நம்புகிறோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவில் தற்போது இரவு தொடங்குவதால், அங்கு குளிர் அதிகமாக இருக்கும் என்பதால், விக்ரம் லேண்டர் நேற்று ஸ்லீபிங் மூடில் வைக்கப்பட்டுள்ளது. நிலவில் பகல் பொழுது தொடங்கியதும் மீண்டும் அவற்றை இயக்க இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

# மறைந்த மகாராணி எலிசபெத்துக்கு நிரந்தர நினைவிடம்



மறைந்த பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் நிரந்தர நினைவிடம் அவரது 100ஆவது பிறந்த தினத்தையொட்டி, 2026இல் திறக்கப்படும் என பிரிட்டன் அரசு ஞாயிற்றுக்கிழமை அறிவித்துள்ளது.

நினைவிடம் அமைப்பதற்கான திட்டத்தை வகுக்க, அரசி எலிசபெத்தின் முன்னாள் தனிச் செயலர் பிரபு ராபின் ஜான்வீரின் தலைமையிலான குழுவையும் பிரிட்டன் அரசு அமைத்துள்ளது.

பிரிட்டனை 70 ஆண்டு காலம் ஆட்சிபுரிந்த அரசி இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டெம்பர் 8ஆம் திகதி தனது 96ஆவது வயதில் காலமானார். இதைத் தொடர்ந்து, பிரிட்டனிலுள்ள விண்ட்ஸர் கோட்டையிலுள்ள புனித ஜோர்ஜ் தேவாலயத்தில் அவரது உடல் அரசுமுறைப்படி அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானில் கல்லால் அடித்து பெண் கொலை

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் திருமணம் தாண்டிய உறவில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி 20 வயதுடைய இளம் பெண்ணொருவர், அவரது கணவர் மற்றும் கணவரின் இரு சகோதரர்களால் கல்லெறிந்து கொல்லப்பட்டதாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்படுவதற்கு முன்பு அப்பெண்ணை மரத்தில் கட்டிவைத்து கொடுமைப்படுத்தியதும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றச் சம்பவத்துக்குப் பின் தப்பியோடிய மூவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் ஆண்டுதோறும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஆணவக் கொலை செய்யப்படுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# சட்டக் கல்லூரிக்கு இணைத்துக்கொள்வதற்கான வர்த்தமானியினால் மாணவர்களுக்கு பெரும் நெருக்கடி

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் விசேட கவனம்





கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் கடந்த மே மாதம் 15ஆம் திகதி வெளியிடப்பட்ட 2332/02ஆம் இலக்க விசேட வர்த்தமானி தொடர்பில் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தவர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டக் கல்லூரிக்கு உள்ளீர்த்துக்கொள்ளப்படுவதற்கான தகுதிகள் குறித்து குழு தனது அக்கறையை வெளிப்படுத்தியது. இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் சட்டமானியைப் பெற்றுக் கொண்டவர்கள் அல்லது சட்டமானிக்காக உள்ளீர்க்கப்பட்ட மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்பது குழுவின் நிலைப்பாடாக இருந்தது.

அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மாணவர்கள் மீது சுமையை ஏற்றும் வகையில் சட்டக் கல்லூரிக்கான கட்டணத்தை உயர்த்தியதன் அடிப்படை என்ன என்றும் குழு கேள்வி எழுப்பியது. ஏனைய பல்கலைக்கழகங்களைப் போன்று சட்டக் கல்லூரியின் பராமரிப்புக்குத் திறைசேரியிலிருந்து பணம் ஒதுக்கப்படுவதில்லையென்றும் அதிகரித்துள்ள செலவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாறு கட்டணம் அறவிடாமல் சட்டக்கல்லூரியை நடத்திச் செல்வது சிரமமானது என இதற்குப் பதிலளித்த சட்டக் கல்லூரியின் அதிபர் குறிப்பிட்டார்.

மாணவர்களின் மீது சுமையை அதிகரிக்காது சட்டத்தைப் பயிற்சிசெய்யும் சட்டத்தரணிகளிடமிருந்து உறுப்புரிமைக்கான கட்டணமொன்றை பெற்றுக்கொள்ளும் முன்மொழிவு இதன்போது கருத்திற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட வேண்டும் என்பது குழுவின் தலைவருடைய நிலைப்பாடாக இருந்தது.

அத்துடன், 2023 ஜனவரி 14ஆம் திகதி நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட 2314/80ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள ஒழுங்குவிதி மற்றும் 2023 ஏப்ரல் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட 2328/16ஆம் இலக்க வர்த்தமானியிலான கட்டளை என்பன குறித்தும் இங்கு ஆராயப்பட்டதுடன், இதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதில் இராஜாங்க அமைச்சர்களான அநுராத ஜயரத்ன, சிசிர ஜயகொடி, அருந்திக பெர்னாண்டோ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான கெவிந்து குமாரதுங்க, பிரேம்நாத் சி.தொலவத்த மற்றும் அசோக பிரியந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

# திருமலையிலிருந்து 30,000 மெற்றிக்தொன் கனியமணல் சீனாவுக்கு ஏற்றுமதி

நமது நிருபர்

திருகோணமலை துறைமுகத்தில் இருந்து 30 ஆயிரம் மெற்றிக்தொன் கனியமணல் சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதுவே, இலங்கை வரலாற்றில் ஏற்றுமதி செய்யப்பட்ட அதிக பெறுமதிகொண்ட பெருமளவான கனியமணல் என இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் தெரிவிக்கின்றது.

இந்நிலையில், திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் இறங்குதுறையில் இருந்து கனியமணலை கப்பலேற்றும் நடவடிக்கைகள் கடந்த வாரம் இடம்பெற்றது என்று புத்தளம் இல்மனைட் நிறுவனத்தின் பொது முகாமையாளரும் கனிம அகழ்வுத் துறை நிபுணருமான றையன் ரொக்வூட் தெரிவித்தார்.

இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் மேற்கொண்ட சர்வதேச கேள்வி மனுக்கோரல் ஊடாக சீன நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டிருந்தது. சீன நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியாக புத்தளம் இல்மனைற் நிறுவனம் நியமிக்கப்பட்டிருந்தது.



இதுதொடர்பில் அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நமது நாடு வழமையாக இறக்குமதிகளையே மேற்கொள்கின்றது. ஆனால் இப்போது எமது நாட்டிலேயே அகழப்பட்ட கனியமணலை ஏற்றுமதி செய்கின்றோம். இது சிறப்புவாய்ந்த ஏற்றுமதியாகும். ஏனெனில் இதன்மூலம் பல மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி இலங்கைக்கு கிடைக்கும். நாட்டின் டொலர் பிரச்சினையை தீர்ப்பதற்கு இது உதவும் என்றார்.

# சர்வதேச இயன் மருத்துவ தினத்தையொட்டி மக்களுக்கு விசேட விழிப்புணர்வு நிகழ்வு





சர்வதேச இயன் மருத்துவ தினத்தை முன்னிட்டு (செப்டெம்பர் 08) செப்டெம்பர் 02 முதல் 08ஆம் திகதிவரை இயன்மருத்துவ வாரமாக, கொழும்பு பல்கலைக்கழக இயன் மருத்துவ இளங்கலைப் பட்டதாரிகள், இயன் மருத்துவ மாணவ நலன்புரிச் சங்கத்தினால் கொண்டாடப்படவுள்ளது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் பொதுமக்களுக்கான இலவச விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் (03) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வின் வளவாளர்களாக திருமதி தான்யா விஜேசிங்க (முகாமையாளர், இயன் மருத்துவ பிரிவு, டர்டன்ஸ் வைத்தியசாலை, கொழும்பு), நுவான் சி ரொட்ரிகோ (உயர்நிலை இயன் மருத்துவர், லேடி ரிஜ்வே வைத்தியசாலை, கொழும்பு), சுரேஷ் சதுரந்த (இயன் மருத்துவர் மத்திய மார்பு வைத்தியசாலை, கொழும்பு), மகேந்திரன் ராஜ்கரன் (இயன் மருத்துவர்) ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

மேலும் விகாரமாதேவி பூங்கா, கொழும்பு பொது நூலகம், கொழும்பு மாநகர சபையின் கீழ் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடம் போன்றவற்றில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளிகள் இந்நிகழ்வில் பங்கேற்று பயனடைந்தனர். இதன்போது மூட்டு வாதத்தை தடுப்பதில் உடற்பயிற்சியின் பங்களிப்பு மற்றும் உடற்பயிற்சியின் போதான தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு உடற்பயிற்சியின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் வகையில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது.

இலவச மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் வருகை தந்தோரிடம் செப்டெம்பர் 08 கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடைபெறவிருக்கும் இலவச இயன்மருத்துவ சிகிச்சையகத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.







**கொழும்பு விவேகானந்தா சபையின் 120ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நூல் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. விவேகானந்த சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி டாக்டர் எம்.ஆர். ராஜமோகன் மற்றும் விவேகானந்த சபையின் நிர்வாகக் குழுவினர், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.**

**படங்கள்:** எம்.நாசர்

# சாய்ந்தமருதில் கௌரவிப்பு விழா







கோணாவத்தை நிருபர்

கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் நடத்திய உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது வீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.றெளசுல் ஹாதி தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.றொக்ஷ் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், பள்ளிவாசல் தலைவர்கள், அதிபர்கள், தென்கிழக்கு பல்கலைக் கழக உபவேந்தர் றமீஸ் அபூபக்கர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எம்.ஏ. திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீத் ஆகியோர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர், பொறியியலாளர் ஏ.எல்.எம்.பாறூக், கல்முனை வர்த்தக சங்கத் தலைவர் கே.எம்.எம்.சித்தீக் ஆகியோரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

# பொலிஸ் திணைக்களத்தின் 157ஆவது ஆண்டு நிறைவு:பொத்துவிலில் விசேட நிகழ்வு



அட்டாளைச்சேனை செய்தியாளர்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பொலிஸ் தின நிகழ்வு பொத்துவில் பெரிய ஜும்மாப் பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.


பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.செனவிரத்னவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.ஜெயபத்ம, உதவிப் பொலிஸ் கண்காணிப்பாளர் தேசப்பிரிய, பொதுமக்கள் பாதுகாப்பு சமூகப்பிரிவு பொலிஸ் உத்தியோகஸ்தர் எம்.சீ.எம். அலிமுதீன், ஜம்மியத்துல் உலமாசபையின் பொத்துவில் கிளைத் தலைவர் மௌலவி முகைதீன் பாவா உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் புரிந்துணர்வுடனும் செயற்படவேண்டுமென விஷேட துஆப் பிரார்த்தனை இடம்பெற்றதுடன், பள்ளிவாசலில் சமுகமளித்த அனைத்து இன சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் ஒற்றுமை மற்றும் சமாதானம் போன்றவற்றை வலியுறுத்திய விஷேட சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இதன்போது பொத்துவில் பிரதேசத்தில் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட பெண்ணொருவரின் சிறுநீரக மற்றும் அறுவைச்சிகிச்சைக்காகத் திரட்டப்பட்ட 20 இலட்சம் ரூபா பண உதவி வழங்கி வைக்கப்பட்டது. பொத்துவில் சமூக அமைப்புகள், ஆர்.எம்.நகர பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இணைந்து பொதுமக்களிடத்திலிருந்து சேகரித்த 20 இலட்சம் ரூபா பணத்தொகையே இவ்வாறு பொலிஸாருடன் இணைந்து வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூரில் கடலரிப்பு உக்கிரம்: தடுப்பதற்கு காத்திரமான செயற்பாடுகள் எடுக்கப்படுமா?

## பொதுமக்கள் கேள்வி





அம்பாறை மாவட்டத்தின் முக்கிய பிரதேசமான நிந்தவூரில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளது.கடந்த சிலமாத காலமாக நிந்தவூர்ப் பகுதியில் கடலரிப்பு ஏற்பட்டு பல்வேறு பாதிப்புகளும் பதிவாகியுள்ள நிலையில், கடலரிப்பு தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிந்தவூரின் சில பிரதேசங்களில் பாரிய கருங்கற்களிடப்பட்டு கடலரிப்பு தடுக்கப்பட்டுள்ள போதிலும், தற்சமயம் ஏனைய சில பிரதேசங்களில் கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளதுடன் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

தற்சமயம் நிந்தவூர் கடற்கரைப்பள்ளிவாசலான மஸ்ஜிதுல் றவாஹா பள்ளிவாசல் முன்பான பிரதேசங்களில் கடலரிப்பினால் மிக மோசமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களிலுள்ள தென்னை மரங்கள் கடலரிப்பினால் காவுகொள்ளப்பட்டுள்ள அதேவேளை, கடற்கரையோரமாகவுள்ள மீனவர் வாடிகளும் கடலால் காவுகொள்ளப்படும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, நிந்தவூர்ப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பாரிய கடலரிப்பு காரணமாக கரைவலை மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைவலை தோணிகள் நிறுத்தப்படும் பல இடங்கள் கடலரிப்புக்கு உட்பட்டுள்ளதாலும் கரைவலை இழுப்பதற்கு போதிய இடவசதி கடலரிப்பால் இல்லாமல் போயுள்ளதாலும் கரைவலை மீன்பிடியை மிகச் சிரமங்களுக்கு மத்தியிலேயே முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கடலரிப்பு காரணமாக கரைவலை மீன்பிடி நிந்தவூரில் பெரும் பாதிப்புக்குள்ளாகி நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர்கள் தொழிலை இழந்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் கடற்றொழிலாளர் அமைப்புகள் கவலை வெளியிட்டுள்ளன.

நிந்தவூரிலேற்பட்டுள்ள மிக மோசமான கடலரிப்பு பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்டோர் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்வருவதுடன் கடற்றொழில் அமைச்சர் இவ்விடயத்தை அவசரமாகக் கருதி நடவடிக்கை எடுப்பதுடன், நிந்தவூருக்கு உடனடி கள விஜயமொன்றை மேற்கொண்டு நிலைமையை நேரில் அவதானித்து ஆவன செய்யவேண்டுமெனவும் பிரதேச மக்கள் கோருகின்றனர்.

நிந்தவூரை கடல் விழுங்குவதற்கு முதல் காத்திரமான செயற்பாடுகள் சம்பந்தப்பட்டோரால் முன்னெடுக்கப்படுமா என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com





மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் தேரோட்டம் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (படங்கள்:களுதாவளை செய்தியாளர் )

# அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக் கழகம் நடத்தும் மர்ஹூம் றஸீன் ஞாபகார்த்த மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## அட்டாளைச்சேனையில் இன்று ஆரம்பம்



எம்.ஐ.எம்.றியாஸ்

தமிழ் லெட்டர் மற்றும் களம் பெஸ்ட் ஒருங்கிணைப்பில் லக்கி விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏ.எம்.எம்.றஸீன் கோச் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

லக்கி விளையாட்டுக் கழகத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இச்சுற்றுப்போட்டியில் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட கிரிக்கெட் அணிகள் பங்குபற்றவுள்ளன.

இச்சுற்றுப்போட்டிக்கான குழுத் தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஹைலண்ட் விளையாட்டுக் கழகத் தலைவரும் அதிபருமான தேசகீர்த்தி எம்.ஐ.எம்.றியாஸ் நியமிக்கப்பட்டுள்ளதுடன் செயலாளராக பிரதம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.கியாஸ்தீன் செயற்பட்டு வருகின்றார்.

அணிக்கு 8 பேர் கொண்ட 5 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியாக இடம்பெறவுள்ள இத்தொடரில் சம்பியனாகும் அணிக்கு 50,000 ரூபா பணப் பரிசும் கிண்ணமும் இரண்டாமிடம் பெறும் அணிக்கு 25,000 ரூபா பணப் பரிசும் கிண்ணமும் வழங்கப்படும்.அத்தோடு, இறுதிப்போட்டியின் சிறப்பாட்டக்காரர், தொடரின் சிறப்பாட்டக்காரர், சிறந்த பந்துவீச்சாளர் ஆகியோருக்கும் கிண்ணங்கள் வழங்கப்படவுள்ளன. இதேவேளை, மர்ஹூம் றஸீனின் வெற்றிக்கு காரணமாக இருந்தவர்கள், அவரோடு பணியாற்றியவர்கள் பலரும் இதன்போது பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் விளையாட்டு உத்தியோகத்தராகவும் மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளராகவும் செயற்பட்டு பல விளையாட்டு வீரர்களின் முன்னேற்றத்துக்குக் காரணமாக அமைந்த ஏ.எம்.எம்.றஸீன் கடந்த வருடம் திடீரென உயிரிழந்தார். அவரது இழப்பு விளையாட்டுத்துறைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

விளையாட்டு உத்தியோகத்தராக அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் மர்ஹூம் றஸீன் கடமையாற்றும்போது அவரின் திறமைகளையும் உயரிய நற்பண்புகளையும் கண்டுகொண்டோம்.எச்சந்தர்ப்பத்திலும் வீரர்களுக்கும் கழகங்களுக்கும் உதவி செய்வதில் இருந்து பின்வாங்காத றஸீன், நியாயத்துக்காக எம்மோடு எப்போதும் தோள் கொடுத்து இரவு பகலாக செயற்பட்டவர். எமது பிரதேசத்தில் பல விளையாட்டுக் கழகங்கள் சிறிது காலம் பின்னடைந்திருந்தன.இந்நிலையில், மர்ஹூம் றஸீன், அட்டாளைச்சேனைக்கு விளையாட்டு உத்தியோகஸ்தராக நியமனம் பெற்று வந்ததும் மீண்டும் விளையாட்டுத்துறை மறுமலர்ச்சி கண்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

அதேபோன்றுதான் லக்கி விளையாட்டுக் கழகத்தின் மூன்றாம் கட்ட எழுச்சிக்கு வித்திட்டவர்களுள் றஸீன் முதன்மையானவர்.

லக்கி விளையாட்டுக் கழக வீரர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் அநீதியிழைக்கப்பட்டபோது கழகத்தின் தலைவர் எஸ்.எம்.அறூஸ் நீதிக்காகப் போராடினார். அப்போராட்டத்துக்கு மர்ஹூம் றஸீன் பலவழிகளிலும் ஆதரவாக செயற்பட்டதை எண்ணிப் பார்க்கும்போது மனம் வேதனையடைகிறது.

விளையாட்டு உத்தியோகத்தர் அப்துல் மஜீத் முஹம்மது றஸீன் சாய்ந்தமருதைச் சேர்ந்த முஹம்மது இப்றாலெவ்வை அப்துல் மஜீத், ஹனீபா ஆயிஷா நபார் தம்பதியின் இளைய புதல்வராவார். இவர் 30.01.1979 ஆம் ஆண்டு பிறந்தார். சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ்.வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை கல்முனை ஸாஹிராக் கல்லூரியிலும் தொடர்ந்த இவர் சாய்ந்தமருதைச் சேர்ந்த முஹம்மது காசீம் பாயிஷா ஆசிரியையைக் கரம் பிடித்தார். இவருக்கு முஹம்மது றஸீன் ஆதீப் அஹமட், முஹம்மது றஸீன் அபாப் ஷஹ்ரீன் ஆகிய இரு பிள்ளைகள் உள்ளனர்.

இந்நிலையில், கிழக்கு மாகாண விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து விளையாட்டு உத்தியோகத்தராக கல்முனை பிரதேச செயலகத்தில் முதல் நியமனம் பெற்ற இவர், கல்முனை பிராந்தியத்தின் விளையாட்டு அபிவிருத்திக்கு தனது பங்களிப்பை காத்திரமாகச் செய்து காட்டினார். அங்கு சுமார் 5 வருடங்கள் கடமையாற்றியதன் பின்னர் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்று வந்ததுடன் அப்பிரதேசத்தின் விளையாட்டுத்துறைக்கும் அளப்பரிய பணிகளைச் செய்துள்ளார்.அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்போதே அம்பாறை மாவட்ட விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதுடன் அந்தப்பதவியையும் மிகத் திறம்படச் செய்து காட்டினார்.

தனது மேலதிகாரிகளையும் தனக்கு உதவி செய்தவர்களையும் மிக உயர்வாக மதித்து செயற்பட்ட விளையாட்டு உத்தியோகஸ்தராக றஸீனை நாம் கண்டோம்.அனைத்து கௌரவங்களும் தனக்கு மாத்திரமே கிடைக்க வேண்டும் என்ற சுயநலம் மர்ஹூம் ஏ.எம்.எம்.றஸீனிடம் ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, தனக்குக் கிடைக்க வேண்டிய கௌரவங்களை ஏனைய அதிகாரிகளுக்கு விட்டுக்கொடுத்திருக்கின்ற பெருந்தகை அவர்.









இந்நிலையில், விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்களின் இன்ப துன்பங்களில் மிகுந்த அக்கறைகொண்ட ஆசானாக, நண்பராக,வழிகாட்டியாக இருந்த றஸீனின் மறைவுச் செய்தி எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மார்க்க விடயங்களில் மிகவும் போற்றுதலுடன் செயற்பட்ட றஸீன் இளம் வயதில் இறையடி சேர்ந்தபோதும் பலரினதும் மனங்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றார்.

அன்னாரது சகல பாவங்களையும் மன்னித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்ந்த சுவர்க்கம் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

# அட்டாளைச்சேனையில் பாராட்டு விழா





அட்டாளைச்சேனை செய்தியாளர்

சம்மாந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதம பொலிஸ் பரிசோதகர் மீராசாஹிப் அப்துல் மஜீத் பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து தேசிய ஐக்கிய நல்லிணக்க ஊடகவியலாளர் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட சேவை நலன் பாராட்டு விழா நேற்றுமுன்தினம்(03) மாலை அட்டாளைச்சேனை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எம்.எம்.ஜுஃபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.ஜெயபத்ம, பிரதேச செயலாளர்களான எம்.ஏ.சி.அஹமட் சாபிர், எஸ்.எல்.எம்.ஹனீபா, எம்.ஐ.எம்.பிரினாஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் ஓய்வு நிலை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.வாஹித், அட்டாளைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர்களான சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், எம்.ஏ.றாசீக் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியாக சேவையாற்றி வந்த நிலையில், ஓய்வு பெற்ற எம்.எஸ்.அப்துல் மஜீத் தேசிய ஐக்கிய நல்லிணக்க ஊடகவியலாளர் அமைப்பினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.ஜெயபத்ம ஆகியோரும் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# அம்பாறையில் காணி உறுதி வீட்டுக்கடன் வழங்கல் நிகழ்வு

## அமைச்சர் பிரசன்ன பிரதம அதிதி





திகாமடுல்ல செய்தியாளர்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் ''உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்'' எனும் திட்டத்தின் கீழ் வீட்டுக் கடன் வழங்கலும் கடந்த கால வீட்டுத்திட்ட உரிமையாளர்களுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கலும் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.வீரசிங்க, ஏ.எல்.எம்.அதாஉல்லா, எஸ்.எம்.எம்.முசாரப் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ஆர்.சூரியாரச்சி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டக் காரியாலயம் மற்றும் கல்முனை நகரக் காரியாலயம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கடந்த கால வீட்டுத்திட்டங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த 62 பேருக்கு வழங்கப்பட்டதுடன் உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் எனும் திட்டத்தின் கீழ் 110 பேருக்கு வீட்டுக்கடன் வசதிக்கான காசோலையும் வழங்கப்பட்டன.

இறக்காமம் அமீரலிபுர வீட்டுத்திட்டம் மற்றும் பொத்துவில் செங்காமம் அல் - மினா வீட்டுத் திட்டத்திலுள்ளவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் தசாப்தங்கள் கடந்தும் இன்னும் வழங்கப்படாமல் இருப்பதை சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப், அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் அக்கிராமத்திலுள்ள மக்கள் எதிர்நோக்கும் குடிநீர்ப்பிரச்சினை, யானைகளின் அட்டகாசம் என்பவற்றை தீர்ப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.



அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உரையாற்றும்போது, இவ்வீட்டுத்திட்டங்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் நில அளவை செய்வதற்கான பணம் இல்லாமையேயாகும். அவ்வீட்டுத்திட்டத்திலுள்ளவர்கள் தங்களது சொந்தப் பணத்தை செலவிட்டு நில அளவை செய்ய முன்வருவார்களாயின் அவர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதில் எமக்கு எந்தப்பிரச்சினையும் இல்லை. இன்று கொடுக்கப்பட்ட காணி உறுதிப்பத்திரங்கள் கூட அவர்களது சொந்தப்பணத்தை செலவிட்டு நில அளவை செய்யப்பட்ட காணிகளாகும் என்றார்.

இந்நிகழ்வில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அம்பாறை மாவட்ட முகாமையாளர் ஏ.பீ.ஐராங்கனி, கல்முனை நகரக் காரியாலய முகாமையாளர் ஜீ.கனகே, பொறியியல் உதவியாளர் ஏ.சி.ஏ.பாஹீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மர்ஹூம் அஷ்ரபின் கனவு இல்லத்தை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## கட்சி ஆதரவாளர்கள் கேள்வி

இஸ்மாயில்புரம் செய்தியாளர்



மர்ஹூம் அஷ்ரபின் 23ஆவது நினைவு தின நிகழ்வில் ஒலுவிலிலுள்ள அவரது கனவு இல்லத்தை மீளப் புனரமைப்பதற்கு கட்சி நடவடிக்கை எடுக்குமா என கட்சி ஆதரவாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் தாறுஸ்ஸலாம் எனப் பெயரிட்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபினால் ஒலுவில் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட கட்சி அலுவலகம் அவரின் மறைவையடுத்து தற்போது கைவிடப்பட்ட காட்டு பங்களாவாக காட்சியளிக்கிறது.

தலைவர் அஷ்ரபின் அரசியல் பண்ணையில் வளர்ந்தவர்கள் என அடிக்கடி பறைசாற்றும் முஸ்லிம் அரசியல் தலைவர்களோ முஸ்லிம் காங்கிரஸின் தலைமையோ அஷ்ரபின் கனவு இல்லத்தை மீளமைப்பதற்கு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்க முன்வரவில்லை. மாறாக கடந்த 23 வருடங்களாக வெறும் நினைவு தினங்களை மட்டுமே நடத்தி வருவதையிட்டு தாம் மிகவும் வருந்துவதாக கட்சியின் மூத்த ஆதரவாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மர்ஹூம் அஷ்ரபின் 23ஆவது நினைவு தினத்தை பிரமாண்டமாக நடத்தும் முஸ்லிம் காங்கிரஸினர் அவரின் கனவை நிறைவேற்றும் வகையில் அம்பாறை மாவட்டத்தின் தாறுஸ்ஸலாம் என அழைக்கப்படும் அவரது கனவில்லத்தை நவீன வசதிகளுடன் மீளப் புனரமைத்து தென்கிழக்கின் அறிவாலயமாக பிரகடனப்படுத்துவதே மறைந்த தலைவருக்கு செய்யும் கைங்கரியமாகும் எனவும் கட்சி ஆதரவாளர்கள் உட்பட பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# மர்ஹூம் அஷ்ரபின் நினைவு தினம்: கல்முனையில் விசேட கலந்துரையாடல்



நூருல் ஹுதா உமர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 23ஆவது நினைவு தினம் எதிர்வரும் 16ஆம் திகதி சாய்ந்தமருதில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அது தொடர்பாக அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் மத்திய குழு உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தலைமையிலான கூட்டம் கல்முனை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

இந் நிகழ்வில், பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.சி.எம். பைசல் காசிம், முன்னாள் பிரதியமைச்சர் எம்.எஸ். தௌபீக், முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட செயலாளர் அக்கரைப்பற்றுக்கு விஜயம்

## முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடல்





திராய்க்கேணி நிருபர்

அம்பாறை மாவட்ட செயலாளர் முதற்தடவையாக அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள அக்கரைப்பற்று, நுரைச்சோலை விவசாயிகளின் காணி தொடர்பான பிரச்சினைகள் குறித்து மேற்படி பிரதேச விவசாயிகளுடன் கலந்துரையாடினார். இதேவேளை, அக்கரைப்பற்று பிரதேச செயலக பௌதீக வளப் பற்றாக்குறை உட்பட இதரவிடயங்கள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

இக்கலந்துரையாடலில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், விவசாய அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# போடியார் புலம்பல்!



தமிழ் தலைவர் மாரில பிரபாகரன தவிர மற்ற எல்லாப்பேரயும் கொல செய்தவங்க தமிழ் ஆயுத குழுக்களாம் எண்டத புளட் தலைவர் சித்தாத்தன் அவரிட அப்பா தர்மலிங்கத்தாரிட நினைவு தினத்தில பேசினவர் எலுவா..?

அடே பொடியா அப்ப உங்கட கொப்பன சுட்ட ரெலோ இயக்கத்தில எலுவா விளக்கு புடிச்சி இருக்கா..?

அத சொல்ல உனக்கு வக்கில்ல அதிக்குள தமிழ் ஆயுத குழு கொல செய்த தமிழ் தலைவர்கள எண்டுமட்டும் பட்டியல் சொல்ல வெட்கம் இல்லையாடாம்பி...

கொழும்புல குமார் பொன்னம்பலம், வெலிகட சிறையில குட்டிமணி எல்லாம் போட்டுத்தள்ளின அப்ப புளட் இயக்கமா..? சிங்களவர்கள் இல்லாட்டி உங்கட இயக்கம் எண்டத ஏற்கப்போறயாடாம்பி.....!

# உலருணவுப் பொதிகள் வழங்கல்





களுதாவளை செய்தியாளர்

157ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு ஏறாவூர்ப் பொலிஸாரின் ஏற்பாட்டில் சேவைக் காலத்தில் உயிர்நீத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹரிஷ டி சில்வா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 3000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் 26 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

# வெடிக்காத நிலையில் குண்டொன்று கண்டுபிடிப்பு

மூதூர் நிருபர்

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலநகர் பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

பாலநகர் பகுதியில் காணி உரிமையாளர் நேற்று தோட்டத்தை துப்புரவு செய்துள்ளார். இதன்போது குண்டொன்று இருப்பதை அவதானித்த காணி உரிமையாளர், பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து, குறித்த இடத்தில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த குண்டானது யுத்த காலத்தில் பயன்படுத்தப்பட்டு வெடிக்காது நிலத்தில் புதைந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

# காணாமலாக்கப்பட்டவர்களின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

செங்கலடி நிருபர்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்தவேளை, இராணுவத்தினால் விசாரணைக்கு என அழைத்துச் சென்று காணாமலாக்கப்பட்ட 158 பேரின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று (05) உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் வருடா வருடம் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் இத்தினத்தில் தமது உறவினர்களை நினைவுகூர்ந்து பிரார்த்தனை செய்வார்கள்.

1990ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பலம் பெற்றிருந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலாபுறங்களிலும் இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் நுழைந்த இராணுவத்தினர் சில நாட்களில் அம்மாவட்டத்தில் தமது நிலைகளை அமைத்துக்கொண்டனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேறி வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட பொது இடங்களில் பாதுகாப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தஞ்சமடைந்தனர்.

அக்காலத்தில் தஞ்சம் பெற்ற இடங்கள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் நடைபெற்றன. அங்கிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பலர் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள்.

அவ்வாறு காணாமல்போன சம்பவங்கள் நடைபெற்று 33 வருடங்கள் கடந்தும் அவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் உறவினர்கள் இருந்தாலும் அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற வினாவுக்கு இதுவரை விடை கிடைக்கவில்லை.

கிழக்குப் பல்கலைக்கழக முகாமில் தஞ்சமடைந்திருந்தவர்களுள் செப்டெம்பர் 5ஆம் திகதி 158 பேர் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு காணாமலாக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் காணாமலாக்கப்பட்டாலும் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கை இழந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இடம்பெறுகிறார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் தஞ்சமடைந்திருந்த நிலையில் செப்டெம்பர் 5ஆம் திகதி கிழக்குப் பல்கலைக் கழக படுகொலை நாள் என உள்ளூர் மக்கள் சமூக அமைப்புகள் பிரகடனப்படுத்தி நினைவுகூரப்படுகிறது.

சம்பவ தினம் காலை 6 மணிக்கு முன்னரே கிழக்குப் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தில் இயங்கிய அகதி முகாம் இராணுவத்தினர் மற்றும் அவ்வேளை இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட தமிழ் ஆயுதக்குழுக்களாலும் சுற்றிவளைக்கப்பட்டது.

அகதி முகாமுக்குள் நுழைந்த இராணுவம் தங்களை அறிமுகப்படுத்தி பின்னர் ஒலிபெருக்கி மூலம் குறிப்பிட்ட வயதுடையவர்களை கிழக்கு பல்கலைக்கழக மைதானத்தில் ஒன்றுகூடுமாறு அறிவித்தல் விடுத்தனர்.

மைதானத்தில் வரிசையில் நிறுத்தப்பட்டவர் கள் இராணுவத்தினரால் அழைத்துவரப்பட்ட முகமூடி மனிதர்கள் முன் நிறுத்தப்பட்டு முகமூடியினால் தலையாட்டப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பஸ் வண்டிகளில் அழைத்துச் செல்லப்பட்ட இந்த சம்பவத்தை வருடங்கள் 33 கடந்தும் தங்கள் அனுபவ ரீதியாக பலரும் நினைவுகூருகிறார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணாமல்போனவர்களின் விசாரணைக்காக ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த ஆணைக்குழு முன்னிலையில் பலர் சாட்சியமளித்தனர்.

ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி கு.பாலகிட்ணர் தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுமக்கள் வழங்கிய சாட்சிகளின் அடிப்படையில் இராணுவத்தினரே செப்டெம்பர் 5ஆம் திகதி 158 பேரையும் 23ஆம் திகதி 16 பேரையும் கைது செய்து கொண்டு சென்றனர் என தெரிவித்திருந்தது.

இந்த சம்பவங்கள் நடைபெற்று 33 வருடங்கள் கடந்தபோதிலும் இதற்கான தீர்வுகள் இதுவரை வழங்கப்படவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

# பங்களாதேஷின் தலையெழுத்து இலங்கையின் கைகளில்
# இன்று இலங்கையை வீழ்த்துமா ஆப்கான்?

ஏ. அகீல் சிஹாப்



ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர்ந்து நீடிக்க ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் கட்டாய வெற்றியை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி 89 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்ற நிலையில் குழு பி யிலிருந்து எந்த அணி சுப்பர்-4 சுற்றுக்கு தகுதிபெறும் என்ற பரபரப்பான நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று நடைபெறும் இலங்கை - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தின் முடிவை பொறுத்துதான் எந்த அணி தெரிவாகும் என்பது உறுதியாகும். இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றிபெற்றால், இலங்கையும் பங்களாதேஷூம் தகுதிபெறும். மாறாக ஆப்கானிஸ்தான் வெற்றிபெற்றால், நெட் ரன்டேட் அடிப்படையில் இரு அணிகள் தெரிவாகும்.

ஆப்கானிஸ்தான் அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் முடிவில் 05 விக்கெட்டுகள் இழப்புக்கு 334 ரன்களை குவித்தது. மெஹதி ஹசன் மிராஸ் மற்றும் ஷாண்டோ இருவரும் சதம் விளாசி அசத்தினர். இமாலய இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 44.3 ஓவர்களில் 245 ரன்களை மாத்திரம் பெற்று 89 ரன்களினால் தோல்வியடைந்தது.

## கொழும்பிலிருந்து போட்டிகள் மாற்றம்?

ஏ. அகீல் சிஹாப்

16ஆவது ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின் லீக் சுற்றுப் போட்டிகள் இன்றுடன் நிறைவுக்குவரும் நிலையில், சுப்பர்-4 சுற்றில் 05 ஆட்டங்கள் மற்றும் இறுதிப்போட்டி இலங்கையின் கொழும்பில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், கொழும்பில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. தொடர்ந்து மோசமான வானிலை நிலவுவதால் இந்த ஆட்டங்களை அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றுவது குறித்து இலங்கை மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துடன் ஆசிய கிரிக்கெட் கவுன்சில் ஆலோசித்து வருகிறது.

இதற்காக பல்லேகல, தம்புள்ள மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய 03 இடங்கள் பரிசீலனையில் உள்ளன. எங்கு மாற்றம் செய்யப்படும் என்பது ஓரிரு நாட்களில் முடிவு செய்யப்படும் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com



நியூஸிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது டி20 போட்டியில் ஆடிய இங்கிலாந்து அணி வீரர்கள், காலமான ஸிம்பாப்வே அணியின் முன்னாள் தலைவரும் பயிற்சியாளருமான ஹீத் ஸ்ட்ரீக்குக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கையில் கறுப்புப்பட்டி அணிந்து விளையாடினர்.

## இன்று காலிறுதியில் ஆடும் ஜோகோவிச்



ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள தொடரில் பல முன்னணி வீர, வீராங்கனைகள் அதிர்ச்சி தோல்விகண்டு தொடரில் இருந்து வெளியேறியுள்ளனர்.

எதிர்வரும் 10ஆம் திகதி இறுதிப்போட்டி நடைபெறவுள்ள நிலையில் இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில், அதாவது ரவுண்ட் ஒவ் 16 சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், குரோஷியாவின் போர்னா கோஜோவை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6:2, 7:5, 6:4 என்ற செட் கணக்கில் குரோஷியாவின் போர்னா கோஜோவை வீழ்த்தி காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார். ஜோகோவிச் காலிறுதி ஆட்டத்தில் இன்று அமெரிக்காவின் டெய்லர் பிரிட்ஸை எதிர்கொள்கிறார்.

## விளையாட்டுத் துளிகள்

இந்திய அணியுடனான ஆட்டத்தில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர்கள் புதிய சாதனை ஒன்றை படைத்தனர். அதாவது, ஆசிய கோப்பை வரலாற்றில் (50 ஓவர்) ஒரு இன்னிங்ஸில் 10 விக்கெட்டுகளையும் வேகப்பந்து வீச்சாளர்கள் வீழ்த்துவது இதுவே முதல் முறை என்ற புதிய சாதனையை படைத்தனர். அந்த வகையில் ஷஹீன் அப்ரிடி 04 விக்கெட்டுகளையும் நசீம் ஷா, ஹாரிஸ் ரவுப் மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றி அசத்தினர்.

★★★★★★

சவூதி புரோ லீக்கில் அல்-நாசர் மற்றும் அல்-ஹஸ்ம் அணிகள் மோதிய இந்த போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். இது ரொனால்டோவின் 850ஆவது கோலாக பதிவானது. அவரது வெற்றிகரமான கால்பந்து வாழ்க்கையில் ஒரு முக்கிய மைல்கல்லாக இது அமைந்துள்ளது. மேலும் கால்பந்து வரலாற்றில் இந்த மைல்கல்லை எட்டிய முதல் வீரர் ரொனால்டோ தான்.

★★★★★★

அமெரிக்க ஓபனில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் ரவுண்ட் ஒவ் 16 சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீரர் டெய்லர் பிரிட்ஸ் மற்றும் சுவிட்ஸர்லாந்து வீரர் டாமினிக் ஸ்டிரைகர் மோதினர். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டெய்லர் பிரிட்ஸ் 7-6, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று முதல் முறையாக காலிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.

## ஒலுவில் இலவன் ஸ்டார் அணி சம்பியனானது



மீரா நகர் செய்தியாளர், சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்து நடத்தப்பட்ட ஜொலிபோய்ஸ் சம்பியன் கிண்ணம் - 2023, இறுதிப்போட்டி அண்மையில் கழகத்தின் தலைவர் புனிதராஜ் தலைமையில் தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

அணிக்கு 11 பேர் 08 ஓவர்கள் கொண்ட இச்சுற்றுத்தொடரில் 32 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின. இதன் இறுதிப்போட்டியில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணியும் பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா அணியும் மோதின. இதில் ஒலுவில் இலவன் ஸ்டார் அணி வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தையும் 50 ஆயிரம் ரூபா பணப் பரிசினையும் தட்டிச்சென்றனர். இத்தொடரின் சகலதுறை ஆட்டக்காரராக இலவன் ஸ்டார் அணியின் தலைவர் முஹம்மட் சிபான் தெரிவு செய்யப்பட்டார்.

## சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு கரப்பந்தாட்டப் போட்டி

மட்டக்களப்பு நிருபர்



சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு அண்மையில் காத்தான்குடி மற்றும் ஏறாவூர் நகர் பிரதேச இளைஞர் கழக உறுப்பினர்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில் ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஏறாவூர் நகர இளைஞர் கழக சம்மேளனத்தின் அல்-பாஸி இளைஞர் கழகம் முதலாம் மற்றும் காத்தான்குடி சமூக மேம்பாட்டு இளைஞர் கழகம் இரண்டாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

இப்போட்டித் தொடரில் முதலாம் இடத்தினைப் பெற்ற அணிக்கான வெற்றிக் கிண்ணம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்ற அணிகளுக்கான விளையாட்டுப் பொருட்களும் இதன்போது வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வொயிஸ் ஓப் ஏறாவூர் அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம். தஸ்லீம் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழீழக் கிண்ணத்தைக் கைப்பற்றிய குமரநகர் ஒன்றிய அணி

சாவகச்சேரி நிருபர்



சுவிஸ் தமிழர் இல்லம் அண்மையில் அனைத்துலக ரீதியாக நடத்திய தமிழீழக் கிண்ணத்துக்கான கிளித்தட்டு இறுதிப்போட்டியில் குமரநகர் ஒன்றிய வெளிநாட்டு அணியினர் வெற்றிப்பெற்று தமிழீழக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

சுவிஸ் தமிழர் இல்லம் 20ஆவது தடவையாக நடத்திய தமிழீழ கிண்ணத்துக்கான கிளித்தட்டு இறுதிப்போட்டி சுவிஸ் நாட்டில் இடம்பெற்றிருந்தநிலையில், கைதடி நண்பர்கள் அணியை எதிர்த்து குமரநகர் ஒன்றிய வெளிநாட்டு அணியினர் மோதினர்.



இதில் கோடீஸ் தலைமையிலான குமரநகர் ஒன்றிய அணியினர் 1:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றிருந்தனர். இறுதிப்போட்டியின் சிறந்த வீரராக குமரநகர் அணியைச் சேர்ந்த புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழும் வேலாயுதம் லட்சுமணன் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்காவை வெள்ளையடிப்பு செய்த ஆஸி.



தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டி20 ஆட்டத்திலும் அவுஸ்திரேலியா 05 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை 3-0 என முழுமையாகக் கைப்பற்றியது.

முதல் இரு ஆட்டங்களிலும் ஆஸி. அணி வெற்றிபெற்ற நிலையில் நேற்று முன்தினம் டேர்பனில் நடைபெற்ற 3ஆவது ஆட்டத்தில் முதலில் தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 08 விக்கெட்டுகள் இழப்புக்கு 190 ரன்கள் சேர்க்க, அடுத்து அவுஸ்திரேலியா 17.5 ஓவர்களில் 05 விக்கெட்டுகள் இழந்து 191 ரன்களை எட்டி வென்றது. அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகன், மிட்செல் மார்ஷ் தொடர் நாயகன் விருது பெற்றனர்.




## திருடனை துரத்திப்பிடித்த கார்லோஸ் சைன்ஸ்

இத்தாலியில் நடந்த F1 போட்டியில் மூன்றாவது இடத்தை கைப்பற்றியிருந்தார் ஸ்பெயின் நாட்டின் கார்லோஸ் சைன்ஸ். போட்டி முடிந்து சில மணி நேரத்தில் அவரது கைக்கடிகாரம் கொள்ளையடிக்கப்பட்டதாக தகவல் வெளியானது. அவர் தங்கியிருந்த அர்மானி ஹோட்டலில் குறித்த சம்பவம் நடந்துள்ளது. இதனையடுத்து பொதுமக்கள் சிலருடன், தமது ஃபெராரி உடையுடனே திருடர்களை சைன்ஸ் துரத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

அதிர்ஷ்டவசமாக தமது விலைமதிப்பற்ற ரிச்சர்ட் மில்லே (500,000) கைக்கடிகாரத்தை மீட்டுள்ளார் என்றே கூறப்படுகிறது. இந்த விவகாரத்தில் இத்தாலி பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர். முன்னர் பிரித்தானியாவின் Lando Norris என்பவரது ரிச்சர்ட் மில்லே கைக்கடிகாரமும் கொள்ளை போனது. ஆனால் அவருக்கு அந்த கைக்கடிகாரம் திரும்பக் கிடைக்கவில்லை என்பதுடன், கொள்ளையிட்டவர் குற்றவாளி அல்ல எனவும் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. சம்பியன்

அட்டப்பள்ளம் செய்தியாளர்



அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் கல்முனை சனிமவுன்ட் விளையாட்டுக்கழகம் நடத்திய, 22 அணிகள் பலப்பரீட்சை நடத்திய மாபெரும் உதைப்பந்தாட்ட சமரில் ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணியினர் சம்பியனாக மகுடம் சூடினர்.

இவ் இறுதிப் போட்டி கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இதில் ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணியினரை எதிர்த்து கல்முனை சனி மௌண்ட் விளையாட்டுக் கழகம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் 5 : 0 என்ற கோல் கணக்கில் ஏறாவூர் வை.எஸ்.எஸ்.சி. அணியினர் வெற்றியீட்டி கிண்ணத்தை சுவீகரித்தனர்.

அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் வை.கே.றஹ்மான் தலைமையில் இடம்பெற்ற இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் தலைவரும் ஆசிய உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினருமான ஜஸ்வர் உமர், கௌரவ அதிதியாக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய கொள்கைபரப்பு செயலாளருமான கே.எம்.ஏ. ஜவாத் ஆகியோருடன் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவர்களுள் ஒருவர் மற்றும் கல்முனை சனி மௌண்ட் விளையாட்டுக் கழகத்தின் செயலாளருமான எம்.ஐ.எம்.அப்துல் மனாப் மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளன உறுப்பினர்கள், பிரதேச விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7